நவம்பர் - 2001



# தொண்டன்

12/-

ஆரம்பம் : பெப்ரவரி - 1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

நவம்பர் - 2001

மலர் 33 ❄ இதழ் 08

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS
CENTRE
P. O. BOX - 44
BATTICALOA. 30000
Tel: 065 - 22723

விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 160/=
(தபாற்செலவு உட்பட)



## உள்ளே

அன்புடன் உங்களோடு - 01
கொடை - 02
முடிவில்லா வாழ்வு - 4
ஒரே கடவுட் ... - 05
இலக்கிய மஞ்சரி - 07
கத்தோலிக்க ஆசிரியத்துவம் - 08
இரவில் உதித்த யேசு... - 10
கல்முனைப் பிரதேச... - 12
தொடர் கதை - 13
மாணவர் பக்கம் - 15
திருச்சபைச் செய்திகள் - 18
கர்த்தரின் சிருஷ்டிப்பு - 20
திருப்பாடல்கள் இசைநாடா - 21
பரிசுப் போட்டி - 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

கார்த்திகை பிறந்தால்
கல்லறை நினைவுகள் மனதில் தோன்றுகின்றன. எம்மை விட்டுப் பிரிந்து போன உறவுகளின் கடந்தகால எண்ணங்கள் மனத்திரையில் காட்சியளிக்க கண்களில் கண்ணீர்த் துளிகள் பனிக்கின்றன.

கல்லறை நோக்கிக் கால்கள் விரைய பூச் செண்டுகளும், ஒளி விளக்குகளும் கல்லறைகளை அலங்கரிக்க, பிரார்த்தனைகளும், செபங்களும் மேல் எழும்ப, அர்த்தமுள்ள நாளாக நவம்பர் ௨ம் திகதியையும் - ஏன் நவம்பர் மாதத்தையுமே அன்னையாம் திருச்சபை ஒதுக்கித் தந்துள்ளது.

இறந்து போனவர்கள் இத்துப் போனவர்களல்ல;
மாறாக மாட்சிமைக்குரியவர்கள். இறைமகன் இயேசுவின் உயிர்ப்பு இதற்கு ஆதாரமும், அடித்தளமும். எனவே - கார்த்திகை கல்லறைத் திருநாள் கதறியழும் நாளல்ல - பதிலாக எம்மை விட்டுப் பிரிந்த உறவுகளை இறைவன் தனது ஆனந்த மாளிகையில் அணைக்க, செபிக்க துணைபுரியும் நாள்.

இறைமாட்சிமைக்குரியவர்களின் புதையல்களும், அவை அடங்கியிருக்கும் பூமிகளும் பேய்களுக்கும், பூதங்களுக்குமான உறைவிடமல்ல; மாறாக - அவை உயிர்ப்பின் உறைவிடங்கள்.

இவ் உயிர்ப்பின் உறைவிடங்கள் புதர்களுக்கும், பூண்டுகளுக்கும் புகலிடமாகி விடக்கூடாது. அதேபோல் ஆடுகளும், மாடுகளும் உலாவரும் தளமாகக் கூடாது; பதிலாக அவை பூஞ்சோலைகளாகவும் புனரமைக்கப்பட்ட புனித பூமியாகவும் பரிணமிக்க வேண்டும்.

எனவே, நம் பங்கிலுள்ள எம் உறவுகளின் புதைகுழிகளைத் தாங்கிய பூமிகள் சவக்காலைகளாக அல்லாது உயிர்ப்பின் உறைவிடங்களாக மாறவேண்டும்.

இறந்தவர்களுக்கு நாம் செய்யும் மரியாதை நவம்பர் இரண்டிலோ அல்லது நவம்பர் மாதத்திலோ என்றில்லாமல் அதை நிரந்தரமாக மாற்ற உயிர்ப்பின் உறைவிடத்தைப் பற்றிய புதிய சிந்தனைகள் உன் மனதில் தோன்றட்டும்!

**ஆசிரியர்**

## இறைவாக்கு



ஆண்டவர் உம்மை எல்லாத் தீமையினின்றும் பாதுகாப்பார்.
அவர் உம் உயிரைக் காத்திடுவார்.

(திருப்பா: 121/7)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடை

- பெனி -



இந்தக் கிரக பூமியில் - நம்
ஒவ்வொருவருக்கும் 'வாழ'
ஒரு சந்தர்ப்பம்.

'இன்று' வாழ - ஒரு
சந்தர்ப்பம்.

எம்
பிறப்பிற்கு முன்பு -நாம்
என்னவாக இருந்தோம்?
தெரியாது.

எம்
இறப்பிற்குப் பின்பு - நாம்
என்னவாக இருப்போம்?
தெரியாது

தெரிந்ததெல்லாம்
நாம் இப்போது
இருக்கிறோம்

இந்த இருப்பு
ஒரு சந்தர்ப்பம்

இந்தச் சந்தர்ப்பம் - நாம்
கேட்டு கிடைத்ததல்ல
உழைத்து வாங்கியதல்ல
போராடிப் பெற்றதல்ல

கேட்காமலே உழைக்காமலே
போராடாமலே அருளப்பட்டது

இன்றைய எம் இருப்பு
உனக்கும் எனக்கும்
கொடுக்கப்பட்ட கொடை

நாம் இருக்கிறோம் என்பது
புரிகிறது
நாம்
வாழ்கிறோமா என்பது?

அதோ ...........
அந்த மரம் இருக்கிறது
அந்தக் கல் இருக்கிறது
இதோ ........
இந்த மேசை இருக்கிறது
இந்தப் பேனா இருக்கிறது

வெறும்
'இருத்தல்' என்பதுதான்
வாழ்க்கையா?

நானும் நீயும்
இருக்கிறோம் என்பது
புரிகிறது
வாழ்கிறோமா என்பது ......?

உன் வாழ்க்கையை
நீ வாழ்கிறாயா?
என் வாழ்க்கையை
நான் வாழ்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ
பார்ப்பது எல்லாம்
உனது பார்வைகள் தானா?
எனது மதிப்பீடுகள் எல்லாம்
என்னுடையவை தானா?

உனக்கும் எனக்கும்
சுயம் உண்டா?
இல்லை - நாம்
கண்ணாடியைப் போன்றவர்களா?

பிரதிபலிப்பதுதான் வாழ்க்கையா?

எத்தனை கற்பிதங்கள்
எத்தனை தத்துவங்கள்
எத்தனை நம்பிக்கைகள்
எத்தனை சுலோகங்கள்
நாம் உள் வாங்கியிருக்கிறோம்?

உள் வாங்குவதுதான் வாழ்க்கையா?

வரலாறு வரைந்த
ஓவியங்கள் நாம்
ஆனாலும்
முழுமைப் படுத்தப் படாத
ஓவியங்கள்.

காலம் எழுதிய
கவிதைகள் நாம்
என்றாலும்
நிவர்த்தி செய்யப்படாத கவிதைகள்.



யார் யாரோ செதுக்கிய
சிற்பங்கள் நாம்
இருந்தும்
பூரணமில்லாத சிற்பங்கள்

வா
நீயும் நானும் இணைந்து
வரைந்து; எழுதி; செதுக்கி
நம்மை நாமே
முழுமைப்படுத்திக் கொள்வோம்.

எனக்குப் புரிகிறது
இன்னும் சில காலங்களில்
நீயும் இல்லை
நானும் இல்லை.

நம்
காலம் கரைய ... கரைய ....
வருவோர்க்கு வழிவிட்டு
போனவர்கள் போன பாதையில்
போய் விடுவோம்.

போவது
நியதிதான் - ஆனால்
எம் காலடித் தடங்களைக்
கடற்கரை மணற் பரப்பில் அல்ல
பாறைகளில்
செதுக்கிவிட்டுச் செல்வோம்.

ஒரு வேளை
நாளையத் தலைமுறை - அதில்
நடந்து வரலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவில்லா வாழ்வு

'உதிர்ந்துவிட்ட மலர்களே! நீங்கள் என்றும் இறைவனுக்கு உரியவர்கள்' என்று நமது இதயத்து அஞ்சலியை இறந்தோர் நினைவாகச் செலுத்துவது அன்பின் வெளிப்பாடு. அன்புறவு கொண்டு எம்மோடு வாழ்ந்து, இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொண்டு, எம்மைத்தாங்கி வழி நடத்தி, எமது வாழ்வின் அங்கங்களாயிருந்த பலர் இன்று நம்மோடு இல்லை, நமது நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நிதமும் இவர்கள் நினைவைச் சுமந்தாலும் நவம்பர் இரண்டில், இவர்கள் உடல்கள் அடங்கிய கல்லறைகளுக்கு முன்னால் கண்ணீர் விட்டுக் கரைந்து, உணர்ச்சிப் பிழம்பாகி நிற்பது மனதுக்கு ஆறுதலளிக்கிறது. இயேசுவின் மீள்வருகையின் போது இவர்களும் எழுவார்கள் என்னும் எதிர்நோக்கின் அடிப்படை இது. 'ஏனெனில் நீங்கள் கிறீஸ்துவோடு இறந்து விட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும் பொழுது நீங்களும் அவரோடு மாட்சிமை பொருந்தியவராய்த் தோற்றம் பெறுவீர்கள்' (கொலோசையர் - 3:4) என்று புனித பவுலடிகள் கூறுவதில் உயிர்ப்பின் நம்பிக்கை தொனிக்கிறது.

'இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே' (விடுதலைப் பயணம் 3:14) என்று மோசேக்குத் தமது நித்திய தன்மையை வெளிப்படுத்திய தேவனே, படைப்பின் மூலவன். மண்ணால் மனிதனை உருவாக்கி, தனது உயிர்மூச்சினால் உயிர்ப்பித்தவர். மனித மீறுதலால், 'நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்' (தொடக்க நூல் 3 : 19) என்று சபித்துவிட்டார். இதனால் மரணம் மனித உடலை மண்ணுக்கு இட்டுச்செல்ல, உயிர் மூச்சாகிய ஆன்மா இறைவனை அடைகிறது. அந்த ஆன்மாவின் நிலையே முடிவில்லா வாழ்வாகிறது. என்றும், இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ்பவரை அன்றி வேறெவரும் முடிவில்லா வாழ்வில் பங்கெடுக்க முடியாது என்பதை, 'ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியினாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்குட்பட இயலாது என மிக உறுதியாகச் சொல்கிறேன்' (யோவான் - 3:5) என்று ஆண்டவர் நிக்கதேமுக்குச் சொல்லியிருப்பதிலிருந்து புரிந்துகொள்ள முடியும்.. ஏற்புடையவராக நடந்து கொண்ட ஏனோக், ஆதாமின் வழி மரபினர், முந்நூற்று அறுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தவர். 'ஏனோக் கடவுளோடு நடந்து கொண்டிருந்தார்' (தொடக்க நூல் 5 : 24) என்கிறது திருவிவிலியம். தமக்கு ஏற்புடையவராக வாழ்பவரை ஆன்ம, சாரீரத்தோடு எடுத்துக்கொள்ளுமளவு இரக்கமுள்ளவர் என்பதையே இது காட்டுகிறது.

இறந்தோர் உயிர்த்தெழுவர் என்னும் கிறிஸ்தவ நம்பிக்கை மிகவும் தெளிவானது. இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டுப் பாதாளங்களில் இறங்கியபோது, அங்கே மரித்து அடக்கப் பட்டிருந்த சிலர் மீட்படைந்து வெளியேறினார்கள். எனவே, தமது இரண்டாம் வருகையின் போது இறந்தோர் அனைவரையும் உயிர் பெறச்செய்வார் என்பது இதனால் உறுதிபெறுகிறது. எனினும், உயிர்த்தெழுதலின் மூலம் அனைவரும் முடிவில்லா வாழ்வை அடைந்துவிட முடியாது. 'என் தந்தையின் ஆசிபெற்றவர்களே வாருங்கள்' (மத்தேயு - 25 : 34) என்ற இயேசுவின் அழைப்பைப் பெறத்தகுதி பெறவேண்டும்.

தமது பாவங்களுக்காக இறைவனை வேண்ட முடியாத, பாதாளங்களில் அடங்கியிருக்கும் மரித்த ஆன்மாக்களுக்காக ஜெபிக்கக் கூடியவர்கள் நாங்களே, அதைச் செய்யக் கடமைப் பட்டவர்களும் நாங்களே. மனித உணர்ச்சியினால் பெறமுடியாத முடிவில்லா வாழ்வை, இறைவனின் அன்பைப் பெறுவதன் மூலம் அடைய முடியும் என்பதை உணர்ந்து, மரித்த அன்பர்களின் பாவங்களுக்காக இறைவனிடம் பரிகார முயற்சி செய்வோம். அதுவே அர்த்தமுள்ள அஞ்சலியாகும்.

செல்லத்துரை ஜெயராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரேகடவுட் கொள்கையை வலியுறுத்திய எகிப்திய மன்னன் – அமென் ஹாட்டெப் 4

~ மலர்வேந்தன் ~

கடவுள் ஒருவரே என்பது இன்று அனைவரும் அனைத்து மதங்களும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். ஆயினும் பல தெய்வ வணக்கு முறை இல்லாமலில்லை. நவீன அறிவியல் உச்ச நிலை அடைந்துள்ள 21ம் நூற்றாண்டிலும் கூட பல தெய்வங்களை வணங்குவோர் இருக்கவே செய்கின்றனர். ஆனால் ஒரே கடவுட் கொள்கையை உலகம் நினைத்துக்கூடப் பார்க்காத ஒரு காலத்தில் கி. மு பதினான்காம் நூற்றாண்டில், அதாவது மூவாயிரத்தி நானூறாம் ஆண்டில் வாழ்ந்த பாரோ அமென் ஹாட்டெப் –4 என்னும் ஓர் எகிப்திய மன்னன் ஒரே கடவுட் கொள்கையை அறிவித்து சமயத்துறையில் மாபெரும் புரட்சியை உண்டு பண்ணினான் என்பது ஆச்சரியம் கலந்த உண்மையாகும். அவன் உருவாக்கிய மதச் சீர்திருத்தம் உலக வரலாற்றில் ஈடிணையில்லாததும் அற்புதமானதும் என்று பேசப்படுகிறது.

எகிப்திய மக்கள் பல தெய்வ வணக்க முறையைக் கொண்டவர்கள். ஏறத்தாள இரண்டாயிரத்து இருநூறு தெய்வங்களை இவர்கள் வணங்கினார்களாம். உலகில் இவ்வளவு தெய்வங்களை வணங்கிய மக்களினம் எகிப்தியர்களாகத்தான் இருக்க முடியும்... ஊர்வன, பறப்பன, நடப்பன, நீந்துவன எதையுமே இவர்கள் விட்டுவைக்கவில்லை. எல்லாவற்றையுமே தெய்வங்களாக்கி அவைகளுக்குக் கோயில்களும், காணிக்கை, மந்திரதந்திரங்கள், பாடல்கள், ஊர்வலங்கள்,. சடங்குகள் (அருவருப்பு நிறைந்தவையும்) எல்லாம் நடத்திக் கொண்டிருந்தனர். தெய்வங்கள், அவைகளது வாழ்கை நிகழ்ச்சிகள் பற்றி நம்ப முடியாத பல நூறு கட்டுக்கதைகள் எகிப்திய மக்கள் மத்தியிலே நிலவின. இத்தகைய ஒரு காலகட்டத்தில்தான் மன்னன் அமென் ஹாட்டெப் 4ன் ஆணை பிறந்தது. 'எகிப்திய மக்களுக்கு இனிமேல் கடவுள் ஒன்றுதான். பல தெய்வ வணக்கம் இன்று முதல் விலக்கப்படுகிறது' தெய்வத்துக்குச் சமமானவனாக, தெய்வத்தின் வழிவந்தவனாக மன்னன் கருதப்பட்ட அக்காலத்தில் மன்னனின் கட்டளையை மறுத்திட யாரும் துணியவில்லை. 'சூரிய கோளமே நம் ஒரே கடவுள், அதுவே அட்டன் (Aton) என்று பெயர் கொண்ட தெய்வம்.' மன்னனின் ஆணைக்கேற்ப எகிப்தியப் பேரரசு முழுவதிலுமிருந்த பழைய தெய்வங்களின் ஆலயங்கள் எல்லாம் இழுத்து மூடப்பட்டன. எழுதப்பட்டிருந்த தெய்வங்களின் பெயர்களும் அழிக்கப்பட்டன.

## கடவுள் அன்புள்ள தந்தை

அப்பா! பிதாவே! என்று கடவுளைக் கிறீஸ்தவர்கள் கொண்டாடுவர். ஊதாரிப்பிள்ளை உவமையிலே கடவுளை பாசமுள்ள ஒரு தந்தையாக இயேசு காட்டுகிறார். ஆனால் இதே கருத்தை கி.மு 14ம் நூற்றாண்டில் வாழ்ந்த அமென் ஹாட்டெப் 4 கொண்டிருந்தான் எனபது ஆச்சரியமல்லவா?

'கடவுள் மனிதர் அனைவருக்கும் அன்புள்ள தந்தை. நைல் நதிக்கரையிலுள்ள சதுப்பு நிலப்பறவையும் கூட அவரின் நலம் மிக்க பெருமையை உணர்ந்து சிறகுகளைக் கூப்பி துதிசெய்து போற்றுகின்றன... கதிரவன் தோன்றும் காலமும் மறையும் காலமும் அவனைத் தொழுவதற்கு மிகவும் ஏற்ற நேரங்களாகும். அப்பொழுது சூரிய கிரணங்கள் அருளும் நன்மையும் செறிந்திருக்கும். சூரிய தேவன் அக்கினிப் பிழம்பு அல்லன்: கொடுமையானவனுமல்லன்'

இவ்வாறு அறிவியல் கருத்துக்கள் பொதிந்த போதனையைச் செய்தவன் அந்த மாமன்னன். சூரியனின் காலை, மாலை நேரக்கதிர்கள் உடலில்படுவது ஆரோக்கியத்திற்கு நல்லது என்று விஞ்ஞானம் கூறுகிறது.

மன்னனின் போதனையால் ஒரு புதிய சமயக்கலாசாரம் தோன்றியது. கடவுளைப்பற்றிய அச்சமும், தேவையற்ற ஆடம்பரங்களும், அநாகரிகச் சடங்குகளும், பூசகர்களின் ஆதிக்கமும் குறைந்து எளிமையான முறையில் வழிபாடுகள் நடைபெறத் தொடங்கின. ஆடம்பரமான வழிபாடுகளைவிட இறைவனுக்குக் காட்டும் நன்றியே மேலானது என்று கூறப்பட்டது. அந்த நன்றி மனிதர்கள் மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் தம்பணிகளைத் திருத்தமாகச் செய்வதுதான் என்றான் மன்னன். வழிபாடு பற்றிய மன்னனின் கருத்துக்கள் எத்தனை யதார்த்தமானது! முற்போக்கானது!!

## சிலை வணக்கம் வேண்டாம் !

'இறைவனுக்கு உருவம் இல்லை. அவன் வானமெங்கும் நிறைந்துள்ள ஒரு தெய்வீக ஆற்றலே அன்றி வேறில்லை' என்றான் மன்னன் அக்கான் (அமென் ஹாட்டெப் 4 பிற்காலத்தில் தனது பெயரை அக்கன் அட்டான் என்று மாற்றிக் கொண்டான்) ஆகவே கடவுளுக்குச் சிலை செய்தல் எகிப்திய நாடெங்கும் தடை செய்யப்பட்டது.

இஸ்லாம், கிறிஸ்தவம், யூதமதங்கள் கடவுளை உருவமற்றவராகவே கொள்கின்றன. ஆகவே, கடவுளுக்கு அவை உருவம் அமைப்பதில்லை. இந்துமதம் கடவுளை அருவுருவாய்க் காண்கிறது. ஆனால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பல தெய்வ வணக்க முறை, உருவ வழிபாடு தீவிர உச்சம் பெற்றிருந்த காலத்தில் வாழ்ந்த பேரரசன் அக்கானுக்கு இத்தகைய புரட்சிகரமான கருத்துக்கள் எவ்வாறு தோன்றின! வரலாற்றாசிரியர்கள் பிரமிக் கின்றனர். பேராசிரியர் பிளன்டர்ஸ் பெற்றீ 'அட்டானின் கருத்தைப்போல விஞ்ஞானத்துக்கு ஒத்துவரக் கூடிய வேறொரு கோட்பாடு அவனுக்குப்பின் ஓராயிரமாண்டு காலத்துக்கு வேறெவருமே கண்டுபிடித்துச் சொல்லவில்லை' என்கிறார். மேலும் அவர் 'அட்டானின் சிந்தனை ஒரே வேகத்தில் முப்பத்து நான்கு நூற்றாண்டுகளைத் தாண்டி விட்டது. இன்றும் கூட அட்டானின் கொள்கைகளையும் குறியீட்டு முறைகளையும் எவ்விதத்திலும் அபிவிருத்தி செய்துவிட முடியாது. மூடநம்பிக்கையோ, பொய்மைப் புலம்பலோ துளியும் ஒட்டாத பூசனை முறையை புகுத்தினான் அட்டான்' என்று கூறுகிறார். வரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கம்

மனிதனுடைய நற்குணங்களில் தனி சிறந்து விளங்குவது அடக்கம். கல்வி, கேள்வி, குலம், பட்டம், பதவி, செல்வம் முதலிய பல இருப்பினும் அடக்கம் என்ற ஒன்று இல்லையானால் அவன் சிறப்படையான்.

பல ஆயிரம் ஆண்டுகள் தாண்டிச் சிந்தித்த மாமனிதனாகவே மன்னன் அட்டான் காணப்படுகின்றான்.

## மனிதாபிமானம் மிக்க சமாதான விரும்பி

முடியுடை வேந்தர்கள் ஆட்சி செய்த நாடுகளில் எல்லாம் போர், ஆக்கிரமிப்பு, எல்லை விரிவாக்கம், அழிவுகள் என்பதே வரலாறு. சேர, சோழ, பாண்டியர்களின் காலத்தை நாம் நினைவு கூரலாம். ஏன், இன்றைய ஜனநாயக(?) நாடுகள் மட்டும் என்னவாம் என்று நீங்கள் கேட்பதும் புரிகிறது. ஆனால் எகிப்திய சாம்ராஜ்ஜியத்தின் புகழ் பெற்ற பேரரசனாக விளங்கிய அக்கன் அட்டான் போரை வெறுத்தான் என்பது வியப்பானது. போரை ஓர் அநாகரிகம் என்று கருதினான். மாறாக மனைவி மக்களோடு இனிய இல்லறம் நடத்து வதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தான். போரை வெறுத்த அவனது மன நிலையை வாய்ப்பாகப் பயன்படுத்தி அந்நிய நாடுகள் எகிப்தியப் பேரரசின் இரு மாநிலங்களைக் கைப்பற்றிய போதும், போரையும், அழிவையும் விரும்பாத அம் மன்னன் போர் செய்து இரு மாநிலங்களையும் மீட்காது கைவிட்டான். போரின் கொடுமையால் ஏற்படும் அநியாய மனித அழிவுகளை விரும்பாத மனிதா பிமானம் மிக்க மன்னனாகத் திகழ்ந்தான் அக்கன் அட்டான். ஆசிரியர் ஆர்த்தர் வெய்கால் எழுதுகையில் 'உலகத்தில் யுத்தங்களின் இரைச்சல் எதிரொலித்துக் கொண்டிருந்த காலத்தில் அட்டான் நமக்குத் தெரிந்தவரையில் உலகின் முதல் சமாதான தத்துவத்தை உபதேசிக்கிறான். இராணுவ படாடோபங்களின் மகிமைச் சிறப்பால் குடிபடைகளின் இதயங்கள் பூரித்து விம்முகின்ற காலத்தில் அவன் வீர சாகச தோரணைகளிலிருந்து முகத்தைத் திருப்பிக் கொள்கின்றான். எளிமை, நாணய ஒழுக்கம், சூதுவாதில்லாமல் மனந்திறந்து பழகுதல், அந்தரங்க சுத்தி இவற்றைப் போதித்த முதல் மனிதன் அவனே. மனிதாபிமானம் கடைப்பிடித் தொழுகிய முதல் மன்னன் பாரோ அட்டான்தான். இதயத்தில் மிலேச்சத் தனத்தின் சுவடு கூட இல்லாத முதல் மானிடன் அவனே. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த அவனுடைய முன்னுதாரணத்தை இன்றும் நாம் பின்பற்றலாம். ஒரு கணவன் எவ்வாறு நடக்க வேண்டும்? ஒரு தந்தையின் கடமை என்ன? ஒரு நாணய முள்ள மனிதன் செய்ய வேண்டுவது யாது? ஒரு கவிஞனின் உணர்வு எவ்வாறு அமைதல் வேண்டும்? ஓர் அரசனின் அறிவுரை எதைக் குறித்துப் பேசவேண்டும், ஒரு கலைஞன் எதைச் சாதிக்க முயற்சிக்க வேண்டும்? ஒரு விஞ்ஞானியின் நம்பிக்கை எவ்வாறு அமைய வேண்டும்? ஒரு தத்துவஞானி எதுபற்றித் தனது சிந்தனையைச் செலுத்த வேண்டும்? இக் கேள்விகளுக்கெல்லாம் விடையாகத் தன் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவன் மாமன்னன் அட்டான்.'

பல ஆயிரம் ஆண்டுகள் தாண்டி முன்னோக்கிச் சிந்தித்து வாழ்ந்த அந்தப் பெருமகன் இவ்வுலகில் வாழ்ந்தது முப்பது ஆண்டுகளே. அதிலும் ஆட்சி நடத்தியது பதினெட்டு ஆண்டுகளே. குறுகிய கால வாழ்க்கையில் குவலயம் நினைந்து நினைந்து போற்றும் மன்னனாக, ஞானியாக, சிந்தனையாளனாக, மாமனிதனாகத் திகழ்ந்த பேரரசன் அக்கன் அட்டான் (அமென் ஹாட்டெப் 4) மானிட வரலாற்றில் அழியா இடத்தைப் பெற்றுவிட்டான். அவனது மறைவுக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்களும், மதவாதிகளும் சேர்ந்து அக்கன் அட்டானின் சீர்திருத்தங்களையும், அவன் உருவாக்கிய சமய, கலாசார, வாழ்க்கை முறைகளையும் முற்றாகத் தூக்கி எறிந்துவிட்டனர். மீண்டும் பழைய அந்தகார வாழ்க்கை முறைக்குள் புகுந்துகொண்டனர். அவனைத் தூற்றிப் பழித்து சாபமிட்டனர். வரலாற்றைக் கடந்து சிந்தித்த அம்மாபெரும் ஞானியையும் அவனது கருத்துக்களையும் அவன் வாழ்ந்த காலத்துச் சமுதாயத்தால் புரிந்து கொள்ள முடியாமற் போனது துரதிர்ஷ்டமே.

## நெஞ்சைக் குடையும் கேள்வி

மன்னன் அட்டான் வாழ்ந்த காலம் கி.மு 14ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். கி.மு 1400 முதல் கி.மு 1370 வரை அட்டான் வாழ்ந்த காலமாகக் கூறப்படுகிறது. எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் கி.மு 1250ம் ஆண்டளவில் மோசேயால் விடுவிக்கப்பட்டதாக விவிலிய அறிஞர்கள் நம்புகின்றனர். கி.மு 1700 முதல் கி.மு 1250 வரை இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அப்படியானால் இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்த காலப்பகுதியில் எகிப்தை ஆட்சிபுரிந்த பாரோ மன்னர்களில் ஒருவனாக அக்கன் அட்டானும் இருந்திருக்க வேண்டும். மனிதாபிமானமும் உயர்ந்த வாழ்க்கை நெறிகளும், சமாதான வேட்கையும் சமத்துவ நோக்கும் கொண்ட மகா புருஷனான மன்னன் அக்கன் அட்டான் இஸ்ராயேலரின் அடிமைத்தனத்தை எவ்வாறு சகித்துக் கொண்டான், ஏன் அவர்களை விடுவிக்கவில்லை, அல்லது காலக்கணிப்பீட்டில் தவறுகள் நேர்ந்துள்ளதா என்பது புரிந்து கொள்ள முடியாத நெஞ்சைக் குடைகின்ற கேள்வியாகவே உள்ளது.

# ஒரு வேண்டுதல்

திருத்தக் கூடியவற்றைத் திருத்தும் தைரியமும், திருத்த முடியாதவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப்க்குவத்தையும் இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளும் அறிவையும் எனக்கு அருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

~ ஆழியோன் ~

## வாசிப்புப் பழக்கம்....... ............வளர வழி...

எப்படியம்மா பிள்ளைகள் பாடசாலைப் புத்தகங்களையும், ஏனைய உசாத்துணை நூல்களையும் வைத்து வாசிக்கப் போகின்றார்கள்? படிக்கப் போகின்றார்கள்? பெற்றோர்களே! இது உங்களுக்குச் சரியான சவால். பிள்ளைகளுக்காக நீங்கள் செய்யும் தியாகங்கள் அதிகம் அதில் தொலைக்காட்சிக்கு அதிக ஓய்வு கொடுப்பதும் இன்னுமோர் தியாகமாகட்டும்.

அது சரி, இன்றைய சூழ்நிலையில் பிள்ளைகளின் வாசிப்புப்பழக்கத்தை எப்படியதிகரிப்பது?

யுத்தம், ஊடகங்கள் என்பன எம்கையில் இல்லை. அப்படியாயின் என்ன வழி ...? வழியுண்டு.

ஆம், பாடசாலைகளில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கப்பயன்படுவது பாடசாலை நூலகங்களே.

எனவே இந்த நூலக வளர்ச்சியில் பெற்றோர்கள் ஆர்வம் காட்டுவது அவசியம். தினசரி ஆறுமணித் தியாலங்கள் பிள்ளைகள் பாடசாலையில் செலவிடுகின்றனர். அதில் பதினைந்து நிமிடங்களாவது நூலகத்தைப் பயன்படுத்துவார்களாயின் அது போதும்.

ஒவ்வொரு பிள்ளையும் தனது பிறந்த நாளன்று ஒரு சிறுபுத்தகத்தையாவது பாடசாலை நூலகத்திற்கு அன்பளிப்பு செய்தால் நன்று (அது பழைய புத்தகமாயினும் பாதகமில்லை)

இன்னு மொரு முக்கிய அம்சம், பாடசாலையின் இலக்கிய வெளியீடுகள். அவை கையெழுத்துப் பிரதிகளாகவோ, அச்சுப்பிரதிகளாவோ இருக்கலாம்: ஆனால் அவை மாணவர்களின் ஆக்கங்களை மையப்படுத்துவதாக இருக்க வேண்டும். சஞ்சிகையின் தரத்தைப் பேணுகின்றோம் என்றபோர்வையில் கல்விமான்களே பக்கங்களை நிரப்புகின்றார்கள். இது தவிர்க்கப்பட்டு மாணவர்களின் ஆக்கங்கள் மதிக்கப்பட வேண்டும்.

அதுசரி .... சில பிரபல பாடசாலைகள் தமது வருடாந்த சஞ்சிகைகளை இன்னமும் வெளியிடவில்லையே!?

இன்று பெரும்பாலான இளம்பராயத்தினர் மொழியாற்றலில் பின் தங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். உச்சரிப்பு ( குறிப்பாக லகர, ளகர, ழகர வேறு பாடு, ரகர, றகர வேறுபாடு) அரும்பத விளக்கம், விரைவாக வாசிக்கும் தன்மை, எழுத்துப்பிழையின்றி எழுதும் ஆற்றல் என்பனவற்றில் மிகவும் பலவீனர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக இருப்பது வாசிக்கும் பழக்கம் குறைந்து போனமைதான். சிறுவயதிலிருந்தே வாசிக்கும் பழக்கம் பிள்ளைகளிடம் இருந்து வந்தால் அவர்கள் நல்ல சொல்லாட்சி, விளக்கம் என்பனவற்றுடன் பிரமிக்கத்தக்க எழுத்தாற்றலையும் கொண்டிருப்பர். நம்பிள்ளைகள் இவற்றில் பின்தங்கியிருப்பதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன.

1. *உள்நாட்டு யுத்தம்*
2. *கட்புல, செவிப்புலசாதனங்களின் பிரமிப்பூட்டும் வளர்ச்சி*

இந்த உள்நாட்டு யுத்தமானது எம்மவர்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு அசைவுகளிலும் எவ்வகையிலாவது மூக்கை நுழைத்து விடுகின்றது. பலருக்கும் அதுவோர் அழிவுப் பாதையின் வேர்: மிகச் சொற்பப் பேருக்கோ அது வொரு பணம் காய்ச்சி மரம். இக்கொடிய போர் எம் பிஞ்சு உள்ளங்களிலும் நஞ்சை விதைத்து விடுகின்றது. அவ்வுள்ளங்களை மெல்ல மெல்லச் சாகடிக்கின்றது.

புலம் பெயர்வுகளின் நாடோடித்தனமா[illegible] வாழ்க்கை அவலங்கள், தங்க இடமின்மை, நிரந்தர உணவின்மை, கல்விச் சொத்து பறி போனமை, சிறுவர் துஷ்பிரயோகங்கள். என்று பட்டியல் நீண்டு கொண்டு செல்ல யுத்தம் வழி சமைத்து விட்டது. எனவே பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கமும் செத்துவிட்டது.

அன்றாட சீவியத்திற்கே அல்லாடு பவர்கள் எப்படியப்பா வாசிக்கப் போகின்றார்கள்? வசிக்க வழி தேடுவதா, வாசிக்க வழி தேடுவதா?

தொலைக்காட்சிப் பெட்டி வந்ததும் வாசிப்புப் பழக்கம் மெல்ல மெல்ல தொலைந்து விட்டது. வானொலியால் ஏற்கனவே வலுவிழந்து போயிருந்த இப்பழக்கம் கட்புல செவிப்புல சாதனமான தொலைக்காட்சியால் மேலும் தொல்லைப்படுத்தப்பட்டுவிட்டது. பிள்ளைகள் படிக்க வழியின்றி குடும்பமாக தொலைக்காட்சிப் பெட்டியின் முன்பாக இருந்து விடுகின்றார்கள். அலைவரிசைகள் ஏராளம்: பொழுது போக நிகழ்ச்சிகள் தாராளம்!

சில அறிவிப்பாளர்களின் பிழையான உச்சரிப்புகள் நமக்குச் சரியான எச்சரிப்புகளாகக் காணப்படுகின்றன. இந்திய சினிமாக்களின் ஆதிக்கம் – பல புதிய அர்த்தமற்ற சொற்களின் பரப்புதலுக்கு ஆயுதமாக உள்ளன. 'ஜொள்ளு' 'ஜொள்ளு' 'அர்ஜண்ட்' என்று இது நீளும்.

# கத்தோலிக்க ஆசிரியத்துவம்

## புதிய நோக்கு நோக்கி



❋ அருட்திரு நவாஜி அடிகள்

ஓர் ஆசிரியனின் பணிதனை சர்வதேச கல்வி ஆணைக்குழு யுனேஸ்கோவிற்கு (UNE SCO) அனுப்பிய அறிக்கையில் பின்வருமாறு கோடிட்டுக் காட்டுகின்றது. 'இளம் சமூகத்தினர் வருங்கால வாழ்வை நம்பிக்கையுடன் எதிர்கொள்வதிலும் அவர்களின் அதி சிறந்த அவசியத்தையும், பொறுப்புணர்ச்சியையும் கட்டி யெழுப்புவதிலும் ஆசிரியர்களுக்கு ஒரு பொறுப்புமிக்க பணியுண்டு' இதற்கு இன்னும் மெருகூட்டுமாப் போல கத்தோலிக்க கல்விக்கான ஆணையம் (Congre gation for Catholie Education)

'கத்தோலிக்க ஆசிரியரின் வாழ்வானது அவருக்கெனத் திருச்சபையில் கொடுக்கப்பட்டுள்ள தனிப்பட்ட அழைத்தலின் ஊடாகப் பிரதிபலிக்கப்பட வேண்டுமே தவிர, வெறுமனே அதையொரு தொழிலாகக், கருதி செயற்படுத்தக்கூடாது. கற்பித்தல் தொழிலன்று; மாறாக அதுவொரு அழைத்தல்!! இத்தகைய அழைத் தல் வாழ்வில் ஒவ்வொரு கத்தோலிக்க ஆசிரியரும் மூன்று வகையான எதிர்பார்ப்புக்களைத் சந்தித்தாக வேண்டும்.

1. தொழில் சார்(ந்த) தேர்ச்சி - Professional Combetence
2. நற்செய்தி விழுமிய சாட்சியம் - Witness to Gospel Values
3. மாற்றங்களுக்கான முகவர்கள் - Ajents of Changes

### 1. தொழில்சார்(ந்த) தேர்ச்சி Professional Combetence

ஒருவர் ஆசிரியர் பதவிக்குத் தகுதியுடையவராக இருக்க சில அடிப்படைக் கல்விசார் தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும். (பயிற்றப்பட்ட ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், அதிபர் தரம் இதுபோன்ற கல்வித் தகைமைகள்) ஆனால் இங்கு கருதப்படுகின்ற தொழில்சார் தேர்ச்சி வெறுமனே பட்டங்கள் மாத்திரம் அல்ல, மாறாக ஓர் ஆசிரியர் தனது வாழ்க்கை பூராகப் பயின்று கொண்டிருக் கக்கூடிய மனோநிலை. (An atitud being a life long lerner) இங்கு இதனால் கருதப்படுவது என்னவென்றால்.

i. தாம் கற்பிக்கும் பாடம் பற்றிய போதிய அறிவை பெறுவதில் தொடர்ச்சியான ஆர்வம்.

ii. தமது அறிவின் எல்லையை விசாலப்படுத்துவது

iii. தொடர்ச்சியாக தமது கற்பித்தல் முறைமைகளை விருத்திசெய்து கொள்வது.

iv. மாணவர்களின் வாழ்க்கை நடைமுறைகள், மனோபாவங்கள் போன்ற அகக் காரணிகளில் கூடிய கவனம் எடுத்தல்.

இன்று உலகானது நமது வகுப்பறையில் என்றால் தப்பில்லை. உலக மயமாக்கப்பட்ட தகவல் தொழில் நுட்ப விருத்தியினுடாக, இன்று உலகின் பல்வேறு இடங்களில் நடைபெறும் பலவிடயங்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறான மாணவர்களின் தகவல்களுக்கு பல வகைகளில் ஆசிரியர்களிடம் பதில் இல்லாமற் போகக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம். இன்று ஆசிரியர்கள் வெறுமனே புத்தகப் பூச்சியாக மாத்திரம் இருந்து விட்டால் போதாது. அவர்களும் இத்தகைய அறிவில் தம்மை இணைத்து அவற்றிற்கான பொறுப்புமிக்க பதில் களைக் காணமுன்வர வேண்டும். அதனுாடாக புதிய விழுமியங்களை மாணவர்கள் உள்ளத்தில் விதைக்க வேண்டும். இன்றைய மாணவர்களின் மிக முக்கிய தேவை தமது மூளைகளை பல்வேறுபட்ட செய்திகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைப்பதல்ல, மாறாக எவ்வாறு கற்பது என்பதுதான் (Learning how to learn) ஆகவே நீங்கள் மாணவர்களுக்கு முதலில் கற்கை நெறிமுறைகளை (Study Skills) கற்றுக் கொடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் கல்வி இன்று மட்டுமல்ல என்றுமே அவர்களுக்கு அது சுமைதான். எனவே தொழில்சார்(ந்த) தேர்ச்சியினுடாக கல்வியை எளிதாக்க வேண்டிய பொறுப்பு உங்களிடம் உண்டு.

## 2. நற்செய்தி விழுமிய சாட்சியம் (Witness to Gospel Values)

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 'மீட்பரின் பணி' (Redembtoris Missio) என்கின்ற சுற்றுமடலில் கூறுகின்றார் 'இன்று மக்கள் ஆசிரியத்திலும் பார்க்க சாட்சியத்திலும், கற்பித்தலிலும் பார்க்க அனுபவத்திலும், கோட்பாடுகளிலும் பார்க்க செயற்பாடுகளிலும் அதிகம் ஆர்வம் கொண்டுள்ளனர்' இக் கூற்று கல்வித்துறைக்கு மிகவும் பொருந்தும். இன்று உலகில் மனித மதிப்பீடுகள், வாழ்க்கை விழுமியங்கள், ஒழுக்கநெறி போன்றவற்றில் ஒரு தொய்வுநிலை காணப்படுகின்றது. இன்றைய நமது சமூகமானது பல்வேறு மதக் கோட்பாடுகள், விழுமியங்கள் அற்ற தன்மைகள், மதிப்பீடுகளில் முரண்பாடுகள் போன்ற தன்மைகளால் அலைக்கழிக்கப்படுகின்றன. இங்கு இவற்றின் மத்தியில், கத்தோலிக்க ஆசிரியர்கள் விசுவாசத்தின் காவலர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பணியில் உண்மை, அர்ப்பணிப்பு, பணிவாழ்வு, நீதி, இரக்கம், ஆழமான விசுவாசம் போன்ற பண்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இதுபோன்ற பண்புகளால் நிறைக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள், மாணவர்களால் பெரிதும் கவரப்படுகின்றனர். இத்தகைய ஆசிரியரின் தாக்கம் மாணவர் சமூகத்தில் நீண்ட நாட்களுக்கு நீடித்து வாழ்கின்றது.

இத்தகைய கிறிஸ்தவ நெறியில் வளர ஆசிரியர்கள் தங்களைத் தாங்களே விசுவாச நெறியில் பயிற்றுவித்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் இன்று வெறுமனே சில நாளாந்த பக்தி, வழிபாட்டு முயற்சிகளால் கவரப்படவில்லை. மாறாக ஆழ்ந்த இறையியல் விளக்கங்களின் பிற்பாடுதான் ஈடுபாட்டுடன் விசுவாசத்தில் ஆர்வம் கொள்கின்றனர். மாணவர்களின் இத்தாகத்தை பூர்த்தி செய்ய ஆசிரியர்கள் தகுந்த பயிற்சி பெற்றவர்களாக (இறையியல் பயிற்சி Thelogial formation of laity) இருக்க வேண்டும். இத்தகைய பயிற்சியினை வழங்குவதில் மறைமாவட்ட ஆணைக்குழுக்கள் (பொது நிலையினர், மறைக்கல்வி) எப்போதும் முன்வர வேண்டும், தயாராக இருக்க வேண்டும், அதற்கு வேண்டிய ஆவன புரிய வேண்டும்.

## 3. மாற்றங்களுக்கான முகவர்கள் (Agents of Changes)

'ஆசிரியம்' எனும் அழைத்தலை பெற்றுள்ள கத்தோலிக்க ஆசிரியர்கள் மாவில் இடப்பட்டுள்ள புளிக்காரம் போன்று இருக்க வேண்டும். இன்றைய உலகானது நுகர்வுக் கலாசாரம், சடத்துவ மயமாக்கல், உலக மயமாக்கல் போன்ற ஆதிக்க சக்திகளினால் அலைக்கழிக்கப் படுகின்றது. இவற்றின் மத்தியில் ஆசிரியர் பணி சிறப்பான தொன்றாக அமையவேண்டும். அது மட்டுமன்று ஆசிரியர் தனது சமூக கலாசார, பொருளாதார, அரசியல் காரணிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவராக விளங்க வேண்டும். அப்போதுதான் மாணவர்களுக்கு அனுபவபூர்வமான பகிர்வினை வழங்க முடியும். இன்று மாணவர்கள் பலதையும் குறித்து முரண்பாடான எண்ணங்களைக் கொண்டிருக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம். இவற்றை ஆசிரியர்கள் நல்ல வாய்ப்பாகக் கருதி மாணவர்களுடன் கலந்து உறவாடி, உரையாடி அவர்கள் எதிர்கொள்ளும் விசுவாச விழுமிய முரண்பாடுகளைக் களைய உதவவேண்டும். இதனுடாக அவர்கள் மத்தியில் விசுவாசத்திற்கும் இன்றைய காலத்தின் தேவகளுக்கும் இடையில் ஒரு சமூக நிலையைத் தோற்றுவிக்க முடியும். இத்தகைய சமநிலையை தோற்றுவிக்க ஆசிரியர் முதலில் தம்மில் அத்தகைய சமநிலை காணவேண்டும். அதன் வழியில் மாணவர்கள் நல்ல முடிவுகளை மேற்கொள்ள வழிகாட்டலாம். ஏனெனில் இன்றைய மாணவர்கள் மேற்கொள்ளும் முடிவுகளில்தான் நாளைய சமுதாயம் கட்டியெழுப்பப்பட முடியும்.


இன்று நாம் பல்வேறு சிக்கல்கள் நிறைந்த புரிந்துகொள்ளமுடியாத மாற்றங்கள் நிறைந்த யுகத்தில் வாழ்கின்றோம். இச்சிக்கல்கள் பல்வேறுபட்ட காரணிகளால் இளைஞர் சமூகத்தினை இன்று பலமாகத் தாக்குகின்றது. இவற்றின் மத்தியில் அவர்களின் வாழ்வின் நோக்கம், பாதை கண்டுபிடிக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு ஆசிரியர்கள் துணைபுரிவார்களா? மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களில் இதற்கான வழிமுறைகளைக் கண்டு கொள்வார்களா? அரேபிய பழமொழி கூறுவது போன்று 'எனக்கு நெருப்பைக் கொடுங்கள். நான் வெளிச்சம் தருகின்றேன் ( Give me fire and I will give you light) எனுமாற்போல் ஆசிரியர்கள் செயலாற்றினால் அவர்கள் 21ம் நூற்றாண்டை ஒரு புதிய நோக்குடனும், பொறுப்புணர்ச்சியுடனும் கட்டி எழுப்புகின்றார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் உதித்த யேசு சூரியன்

- வாகரைவாணன்



தீமைக்கும் நன்மைக்கும்
யேசுவே
தினமும் இங்கே யுத்தம்
ஊமையாய்ப் போனது
உண்மை.
பொய்க்குத் தான்
புகழ் அஞ்சலி.

இன்று மட்டுமா?
உனது காலத்திலும்
இது தான் நிலை

முள் முடியை
உன் தலையில்
அவர்கள்
பதித்த போது
நீ அதைத்
தங்கமென்றே
தாங்கிக்
கொண்டாய்.

எச்சிலை
உன் கன்னத்தில்
எட்டித் துப்பிய போதும்
அதை
அர்ச்சிக்கப்பட்ட
அபிஷேகமாகவே நீ
எடுத்துக் கொண்டாய்.

கசை அடியால்
உன்
தசை கிழிந்த போதும்
நீ
அசையவேயில்லை.

இறைவனுக்கும்
மனிதனுக்கும்
இடையில் இருப்பவன் நீ
இதனால் தான்
சீசருக்குரியதை
சீசருக்கும்
இறைவனுக்குரியதை
இறைவனுக்கும்
செலுத்துங்கள் என்று
உன்னால் செப்ப
முடிந்தது.

இரண்டு சுபாவங்கள்
உனக்கு
இருந்தாலும் உன்
மனித சுபாவமே
என்னை
மலைக்க வைக்கிறது.

மன்னிப்பதில் நீ
மனிதன் அல்ல
மகாத்மா!

குற்றவாளிகள் என்று
யாரையும்
கூண்டில் ஏற்றாதவன் நீ
சுத்தவாளி
உங்களிடையே இருந்தால்
சுட்டிக் காட்டுங்கள்
என்று
சொன்னவன் நீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வார்த்தைகள் தான்
மரியாளின் இதயத்தில்
உன்னை
ஏற்றி வைத்தது.


ஓட்டைகள் விழுந்த
சட்டத்தோடு உனக்கு
உடன்பாடே இல்லை
ஓய்வு நாளிலும்
ஒருவரைச் சுகமாக்கியமை
ஒரு நல்ல உதாரணம்

ஸ்நாபக அருளப்பர் போல
நீ
இறுக்கமானவன் அல்ல
மிகவும் இளகியவன்
பலவீனமான இராயப்பர்
உன்
பக்கத்தில் இருந்ததும்
பாவிகளோடு நீ
பந்தி அமர்ந்ததும்
இந்தப் பண்பால் தான்.

மூன்று ஆணியில்
உன்
முழு உடலும்
தொங்கிய போதும்
வலப்பக்கம் இருந்தவனுக்கு
வரம் அளித்த
வள்ளல் நீ!

விலாவுக்குள்
வேலைச் செருகியவனின்
விழிகளைத்
திறந்து விட்டவனும் நீதான்!

இரக்கம் என்றால்
இது தான் யேசுவே
உன்னால் தான்
இதைச் செய்ய முடியும்.



புதுமைகள் உன்
புகழுக்காக அல்ல
ஏழைகளுக்கு அவை
ஏணிகள்.

பிறப்பில் இருந்து
இறப்பு வரை
உனது வாழ்க்கை
பெரும் போராட்டம்.

ஒரு நாள் கூட
நீ நிம்மதியாக
உறங்கவே இல்லை.

கடைசியில் நீ
களைத்துச் சோர்ந்த போது
இந்தப் பாத்திரம்
உன்னைக்
கைவிட்டுப் போகட்டும்
என்று
கசிந்து உருகினாய்.

சோதனைகளே
ஒருவனைச்
சுட்ட பொன்னாக்கும்.

பாலைவனம்
உனக்குக் கிடைத்த
பரிசோதனைக் களம்
அதன் பிறகே நீ
அதிகமாகப்
பிரகாசித்தாய்!

ஒருவனின் ஊர்
அவன் ஞானியானாலும்
உயர்த்திப் பிடிப்பதில்லை.

நசரேத்தூரில்
உனக்கு
நடந்தது இது தான்! . **வளரும்....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனைப் பிராந்தியத்தில் வாழும் இனக்குழுக்களுக்கிடையே காணப்படும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சமூக உறவுகள், பிரச்சினைகள் போன்றவை

(தொடர் - 4)

❑ அருட்கலாநிதி எஸ். ஏ. ஐ. மத்தியு S.S.J

## கல்முனைப் பிராந்திய முஸ்லிம் மக்களின் வாழ்க்கை முறைகள்.

'ஆள்புலரீதியாக கல்முனைப் பிராந்தியம் பிரிக்கப் பட்டாலும் மதம், மொழி, கலை கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களால் என்றைக்கும் கல்முனைப் பிரதேசம் மட்டக் களப்புத் தாயகத்தின் ஓர் அங்கமேதான்' என்று மருதமுனை மருதூர்க் கொத்தன் அவர்கள் கூறுகிறார்கள் (கார்மேல் பாத்திமாக் கல்லூரி அணையா விளக்கு -1993)

நிலப்பாங்கு மக்களின் மனப்பாங் கையும், கலை இலக்கியங்களையும் வார்க்கும் வளர்க்கும். கல்முனைப் பிராந்தியம் செழிப்பு மிக்கது.

இங்கு ஆரம்ப காலங்களில் எழுத வாசிக்கத் தெரியாதோரே அதிகமானோர். ஆயினும் அவர்கள் மொழி தமிழ். நாட்டார் கவிவளமும், பேச்சுத் தமிழும் அவர்தம் இலக்கியங்களில் இனிமை தெளித்தன. அவ்விலக்கியங்கள் உழவுத் தொழில் சார்ந்த பாடல்கள், கோலாட்டம், தாலாட்டு, காதல் கவிதைகள், ஒப்பாரி, விடுகதைகள், பாட்டிக்கதைகள் போன்றனவாகும். இவை முற்பட்ட நாட்டார் இலக்கியங் களில் முத்துக்கொளித்தன

அறிஞர் மருதூர்க் கொத்தன் மக்கள் வாழ்வியல் பற்றி பின்வருமாறு கூறுகின்றார். மருமக்கள் தாய முறை மையும், பெண்ணடி முது சொம் என்னும் சொத்துரிமையும், பெண்வீட்டிலேயே மாப்பிள்ளை வாழும் வழமையும், உணவு முறைகளும், விருந்தோம்பலும் தமிழர்களின் வாழ்வு முறை யோடு ஒட்டியவைகளே. அராபியக் குடியேற்றங்கள் கி.பி 6ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பமாகின என்கிறார். இவர்கள் தமிழ்ப் பெண்களோடு மணவினைகள் செய்து கொண் டிருக்க வேண்டும். வர்த்தக நோக்கங்கள் கருதி மட்டக் களப்புக் கரையோரப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்திருக் கலாம். இங்குள்ள தமிழர்களைப் போலவே முஸ்லிம்களும் பெண்ணடி முதுசொம். மருமக்கள் தாயம், பெண்வீட்டிலேயே மாப்பிள்ளை வாழுதல் முதலான வாழ்வு முறைகளைக் கொண்டுள்ளனர்.

அரேபியர்கள் தந்தை வழிச் சமூக அமைப்பை உடையவர்கள். ஆனால் இங்கு தாய்வழிச் சமூகத்தின ராகவே முஸ்லிம்கள் இருக்கின்றனர். குடிவழி வந்த வாரி சுரிமை அடிப்படையிலேயே பள்ளிவாசல் நிருவாகிகள் தெரிவு செய்யப்பகின்றார்கள். பெண்களின் ஆடை ஆபரணங்கள், பலதாரத் திருமணச் சம்பிரதாயங்கள், தாலிகட்டும் முறை உணவுப் பழக்கம் எல்லாமே தமிழர்களை ஒத்திருக்கின்றன. முஸ்லிம்களிடையே வெள்ளைக்குட்டி, குஞ்சுத்தம்பி, குஞ்சு முகம்மது முதலான பெயர்கள் வழங்குகின்றன. இவ்வொற்று மைகளுக்குக் காரணம் தமிழ், முஸ்லீம் சேரநாட்டுத் தொடர் பாக இருக்கலாம்.

முஸ்லிம் கலைகளுள் பொல்லடிக்கதை, அலிபா துஷா நாடகம், உழவர் பாடல்கள், விளையாட்டுப் பாடல் கள், நொடிகள், கதைகள், ஒப்பாரிப்பாடல்கள் ஆகிய வற்றுள் தமிழ் முஸ்லீம் வடிவங்கள் ஒன்றாக உள்ளன.

முஸ்லீம் காதல் கவிகளில் சங்க இலக்கிய அகப் பொருள் நுணுக்கங்கள் காணப்படுகின்றன.

இப்பகுதி நாட்டார் பாடல்களை ஆவணப்படுத்த பல அறிஞர்கள் முயன்றுள்ளனர். அண்மைக் காலங்களில் சட்டத்தரணி, தமிழறிஞர் கவிஞர் S. முத்துமீரான் அவர்கள் இப்பிரதேசப் பழமொழிகளையும், நாட்டார் பாடல்களையும் பல ஆண்டுகள் பயின்று மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்திற்கு 'கலாநிதிப்பட்ட ஆய்விற்காகச் சமர்பித்துள் ளார்கள். இத்துறையில் முன்னின்று உழைத்த ஏனைய முஸ்லீம் பெரியோர்கள் ஜனாப் ஏ. ஆர். எம். சலீம், அ. ச. அப்துல் ஸமது, அல்ஹாஜ் எம். வை. எம். முசம்மில் ஆகியோரும் அடங்குவர். ஆ. மு. ஷரிபுத்தீன் ஹாஜியாரின் பங்களிப்பும் மிகப் பிரதானமானது. ●

~ முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு இனியதொரு அதிகாலையை எத்தனை நாட்களுக்குப்பிறகு சந்திரன் காண்கின்றான். பறவைகளிலே அவனுக்குப் பிடித்தமான கொட்டப்பாக்கானின் ஒலியும், அதற்கீடான வாணியின் தேவாரமும் அவனது மனதை ஈர்த்தன. உடல் உணர்ச்சி வசத்தால் புல்லிரிக்க, கண்மூடிய படியே 'ஓசை ஒலியெலா மானாய் நீ உலகுக்கொருவனாய் நின்றாய் நீயே ....'' என்ற திருவையாற்றுத் திருத்தாண்டகத்தை அவனது வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

இந்த ஓசைகளுடன் அடுப்பில் தண்ணீர் மலமலவெனக் கொதிப்பதுங் கேட்டது. எழுந்து தாயிடம் அடுப்படிக்கே நேராகச் செல்ல. வாய்கொப்பளித்து விட்டு வருமாறு அவள் சொன்னாள். மறுத்தவனிடம் ' அய் ..... ஆகாது தம்பி வவுத்துக்க மொதமொதலாப் போற ஆகாரமெல்ல ... இல்லாட்டி முடும தான் புடிக்கும்' என்று வலுக்கட்டாயமாகச் செம்புத் தண்ணீரைக் கொடுத்து விட்டாள்.

தேனீர் பருகும் போதே 'ஆத்தைக்கிட்ட நேத்தே நீ போய் வந்திருக்கனும். சொல்லுவமெண்டு நெனச்சனான்தான் நீ படுத்திட்டியே' என்று சொன்ன தாய்க்கு 'ஆவணிச் சோதின மட்டும் நிப்பன்தானம்ம, பாடத் திட்டமெல்லாம் முடிஞ்சிற்றுத்தானே' எனச் சொல்லிக்கொண்டே சந்திரன் தேனீரில் மூழ்கிப்போனான்.

சின்னவன் சாரனைக் கழுத்துவரை போர்த்தியவாறு அடுப்படியில் வந்தமர, அவனது கடவாயில் வழிந்து காய்ந்திருந்த வீணி, இரண்டு கொம்புகள் வெளியே நீட்டிக் கொண்டிருப்பது போலபட, சந்திரன் அவனை வாயைக் கழுவுமாறு விரட்டிக் கொண்டிருந்தான். சின்னவனோ சிணுங்கியவாறு 'எனக்கொண்ணா



அ.ச.பாய்வா எழுதும் தொடர் நவீனம்.

## அத்தியாயம் - 02

என்று எழுந்து தாயின் பக்கம் சென்றமர்ந்து கொண்டான்.

அம்மாதான் இவனப் பழுதாக்கிற போலருக்கு ரெண்டு விளாசிட்டா ஒழுங்காச் செய்றார். பாப்பம் நானிஞ்ச ரெண்டுமாசம் நிப்பன்தானே. அப்ப கவனிக்கிறன்' என்று சந்திரன் சொல்ல தாய் சின்னவனின் காதுக்குள் ஏதோ சொல்ல சின்னவன் தண்ணீர்ச் செம்புடன் வெளியேறினான்.

தேனீரில் மூழ்கிக் கொண்டிருந்தவனுக்குத் தாய் கட்டளைகளாகவே இட்டுக் கொண்டிருந்தாள். அதிலவன் யார் யார் வீடுகளுக்குப் போக வேண்டுமென்பதை விட போகக் கூடாதென்கிறவர்களின் பட்டியல்தான் நீளமாயிருந்தது. இந்த நீளமான பட்டியலில், தன்னுடன் கதிரவெளியில் படித்த பெண்பிள்ளைகளின் வீடுகள் அடங்கியிருந்ததைப் புரிந்ததும், சந்திரன் மிகுந்த கெக்காளமிட்டு சிரிக்கத் தொடங்கினான்; அவனது தேநீரும் சிந்திப் புரைக்கேறிவிட்டது.

'என்ன நீ சிரிக்கிற, அதுகள் மருந்தக்கிருந்தப் போட்டிடுவாள்கள்'

'என்னம்ம, மருந்தும் மாயமும், மனசு சுத்தமாகயிருந்தா ஒண்ணாலயும் அசைக்கேலா'

'அதெனக்குத் தெரியா. ஊரில மாப்பிள்ளைக்கிருக்கிற பஞ்சத்தில ஆர அமத்தலாமெண்டிருக்காளுகள்'

'அதுக்கம்ம தெரிஞ்சதுகளக் கண்டா என்னெண்டம்ம கதைக் காமபோற ...... நான் வகுப்பெடுத்ததுகள் என்னக் கண்டா விடுங்களா?'

'அப்ப நீ ரெண்டொரு நாள் நிண்டிட்டுப்போ. காலம் நல்லால்ல. அங்கபோய்ப்படி'

எழுந்தவள் சட்டிபானைகளைக் கழுவுவதற்காக அவைகளைக் கிணற்றடிக்குக் கொண்டு செல்லும் போதே 'போறெண்டா ஆத்தைட்டயும், சீனியம்மாகிட்டயும் பேய்த்துப்போ. இல்லாட்டித் தண்ணியடிச்சிப்போட்டு அந்தாள் இஞ்சவந்து கத்தும்.'

'பொறகென்ன வயிரவனுக்குச் செய்த பழய கஞ்சா ரொட்யேதும் வச்சிருப்பார்'

சின்னவன், ராணியெல்லோரும் கொல்லென்று சிரிக்க செல்லம்மாவுக்குச் சிறிது அவமானமாய்ப் போனது. 'மாமனெண்டு மட்டு மரிவாதியில்லாம....' என்று அவள் கிணற்றடியிலிருந்தவாறு புறுபுறுத்துக் கொண்டிருந்தாள். சந்திரனும் கிணற்றடிக்கே சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்ம... நீங்கெல்லாம் கொஞ்சம் வெளியில வந்து பார்க்கணும், உலகத்தில என்ன நடக்குதெண்டு. நான் நான்தானம்மா. எனக்கென்ன இண்டைக்குக் போறெண்டாலும் போறன்' என்று தீவிர மற்ற நிலையில் மிகவும் இயல்பாகப் பேசிக் கொண்டிருந்தான். ராணி அண்ணனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள். வேறென்ன, அண்ணன் இன்றைக்கே பஸ் ஏறிவிடுவானோ என்ற ஏக்கந்தான்.

சந்திரன் உண்மையிலேயே வெளிக்கிட்டு விடுவானோ வென்கிற உள்ளூரப் பயம் செல்லம்மாவுக்கு. சந்திரன் ராணியிடம், தாயைச் சீண்டும் முயற்சியாக 'ராணி, அண்ணாச்சி இஞ்சிருந்தாகெட்டுப் பேய்த்திருவனாமெண்டு அம்ம சொல்றா. நான் நாளைக்குப் போயிருவன்' என்று சொல்லிக் கொண்டே திண்ணையில் சென்றமர்ந்து கொண்டான்.

குசினிக்குள் தடாலென்று சப்தங் கேட்க, கதிரவேல்....' என்று ஆர்ப்பரித்துக் கொண்டு செல்லம்மா ஓடவும் 'தே..வாங்கு, பூனைய கலைக்கத் தெரியலிய....' என்று சின்னவன் முதுகில் குத்துவிளவும், சின்னவன் அலறிக்கொண்டு அடிக்குத் தப்பிக்கொண்டு ஓடவும், எல்லாம் தன்னால் விளைந்த ரகளைதானென்பதை அறிந்திருந்தும், எதுவுமே நடைபெறாததுபோல அசையாதிருந்தான்.

இயல்பான நிலைக்குவந்த செல்லம்மா, 'ஆர்ர வீட்ட போனாலும் ஒண்டயும் வாங்கிக் குடிச்சிடப்பட மனே' என்று மகனிடம் கெஞ்ச 'எனக்கென்ன விசராம்ம. நான் இதுகளிட்ட பச்சத் தண்ணிகூடக் குடிக்க மாட்டன்' என நெஞ்சாரப் பொய் சொன்னான். மகன் தனக்குப் பொய் சொல்ல மாட்டான் என்று மனதார நம்பிய

**அன்பு கண்கூடாக வெளிப்படும் சந்தர்ப்பமே பணி என்பது அன்போடு செய்யும் பணியின் மூலம் கலப்பற்ற பெருமிதத்தை அடையும் பெருந்தன்மையான மனிதனாக உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.**

செல்லம்மா மகனுக்கு அனுமதியளித்தாள். யாவும் சகஜ நிலைக்குத் திரும்பியதை உறுதி செய்து கொண்ட ராணி, ஒடிவந்து சந்திரனின் மடியில் அமர்ந்து கொண்டாள்.

தாய் சொன்னதுபோல் ஆத்தை வேலாத்தையிடம் செல்வது தான் அவன் முதல் வேலையாயிருந்தது. ஆத்தையின் வீடு சந்திரனின் தெரு கடற்கரையுடன் இணையும் வீதியில், தோணா வழியாகச் சென்றால் அடம்பனைத்தாண்டி எவ்வித சிரமமுமின்றி அடையக் கூடிய விதத்தில் அமைந்திருந்ததனால் அந்த வழியையே தேர்ந்தெடுத்தான்.

கடற்கரையை அண்மித்த போது றேமன் வாடியில் முதலாவது பாடு வலையிழுக்கும் ஏல வாலே... சப்தம் கேட்டது. இது கீரிமீன் பிடிக்கும் காலமாதலால், கீரியை இரையாகக் கொள்ள வரும் பெரிய வேற்றின மீன்களும், மடிமடியாகப் பிடிபடு மென்பது அவனுக்குத் தெரியும்.

இலங்கையின் ஒரு அந்தத்திலிருந்து இன்னொரு அந்தத்துக்கு வந்து தொழில் புரியமிந்தச் சிறிய கூட்டத்தின் முயற்சி அவனுக்கு வியப்பையே அளித்தது. எங்கள் பிரதேசத்தின் கடல்படு திரவியங்களை அவர்கள் அள்ளிக்கொள்ள, இங்கிருப்பவர்கள் அவர்களிடம் கையயேந்துவது அவனுக்குத் தன்மானத்துடன் சம்பந்தப்பட்டதொரு பிரச்சனையாகவேபட்டது.

இந்த வென்னப்புவ கரையோரச் சிங்களவர்கள் கத்தோலிக்கராதலால், தங்கள் வாடிகள் நான்குக்குமாக ஓர் ஆலயத்தைக் கூட அமைத்திருந்தார்கள். திரண்ட செல்வமும், பெரும்பான்மையினராதலால் அரசின் உதவிகளும் அவர்களுக்கு அந்த ஊரில் அகலக் கால்பதிக்க வேண்டிய திராணியைக் கொடுத்திருந்தது.

புழுதியை ஊர் மனைகள் மீதும் மக்கள்மீதும் வாரியிறைத்துக் கொண்டு, 'றேமன் டி மெல்' என்ற அலங்கார சிங்கள எழுத்துக்களை இரண்டு விலாவிலும் நெற்றியிலும் சுமந்துகொண்டு அவ்வேளை அவனைக் கடந்து சென்ற, அந்தப் புத்தம் புதிய லொறி தூரத்தில் அதன் புழுதிக்குள்ளேயே மறைந்து செல்வதைப் போல், அவனுள்ளும் அந்த நினைவுகள் மங்கலாய் இதயத்திரையில் விரியத் தொடங்கின.

**தொடரும்.....**


**விதைத்ததற்கு மேலாக நெல்லை எதிர்பார்க்க வேண்டும். அறிந்ததற்குக் குறைவாக சொல்லைப் பயன் படுத்த வேண்டும். அப்போது நம் சொல் வெல்லும் சொல்லாகும். இல்லை என்றால் வெறும் சொல்லாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பக்கம்

க.பொ.த. (சாதாரணம்)
- கத்தோலிக்கம் -
* மெற்றில்டா



17ம் பாடம்

## மக்களின் நலனுக்காக நம்மை அர்ப்பணிப்போம்

1865ம் வருடம் ஏப்ரல் மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன் ஒரு கொலைகாரனால் உயிரிழந்தார். அவரது பூதவுடலுக்கு மரியாதை செய்ய வந்தவர்களில் ஒரு கறுப்பினத்தாய் தன் குழந்தையைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு 'எமக்காக உயிர் கொடுத்தவர் இவர்' எனக் காட்டினாள். இதே போல எம் தாய்மாரும் இயேசுவைத் தம் குழந்தைகட்குக் காட்டவேண்டும்.

சொல்லாலும், செயலாலும் கிறிஸ்துவைப் போல் சேவை செய்பவர்கள் மிகக்குறைவு. ஆனால், பேரும், புகழும், அதிகாரமும் பெறவேண்டுமென்ற நோக்குடன் கடமைகளை மறந்து செயற்படுபவர் பலர், இன்று காணப் படுகின்றனர்.

சுய நலத்துடன் செய்யும் சேவைக்கும், தனது உயிரைக்கூடப் பணயம் வைக்கும் சேவைக்கும் நிறைய வேறுபாடுகளுண்டு.

அநீதிக்கும், நேர்மையின்மைக்கும் மத்தியில் இயேசுவும் அவரைப் பின்பற்றிய ஆபிரகாம் லிங்கன், மகாத்மாகாந்தி ஆகியோரும் மக்களுக்காகத் தம்முயிரைப் பணயம் வைத்தவர்களாகும்.

எமது சமுதாயத்தில் கிராமசேவகர், மாகாணசபை யமைச்சர். அருட்தந்தை, அதிபர், கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர், தந்தையுடன் நம்மையும் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இயேசு செயற்படுத்திய மானிட சேவையில் இரு பிரிவுகளுண்டு.

1. வெளிப்படையாகத் தெரிவது
2. ஆழமான ஆன்மீக வளர்ச்சி.

நாசரேத்தில் கிறிஸ்து ஏற்படுத்திய மனித சேவையை நாமும் தொடரவேண்டும்

குருடருக்குப் பார்வையளித்தல், முடக்குவாத முற்றவரைக் குணமாக்குதல், மக்களுக்கு நல்லறிவூட்டல், தவறான எண்ணக்கருத்துக்களை மாற்றுதல், பசித்தோருக்கு உணவளித்தல் ஆகியன மனிதனது நலனுக்காக ஆற்றும் சேவைகளாகும்.

முழுமனிதனுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கையில் அவனது ஆன்மீகத் தேவைகளை மட்டும் கருத்திற் கொள்ளாது உடல்தேவைகளிலும் உதவுவது கிறிஸ்தவனது கடமையெனக் கிறிஸ்து தம் வாழ்வின் வழியாக எமக்குக் கற்பித்தார்.

இன்று பலர் சொல்லுவதைச் செயலில் காட்டுவதில்லை. ஆனால் சிலர் தம் கடமைகளையேற்றுச் சேவையாகச் செய்து வருகின்றனர். அமைதியாகச் செய்கின்றனர். கிறிஸ்துவும் இதையே செய்தார்.

தமது கடமைகளில் தவறுதல் நன்றன்று. 'நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பி அதனைக் கீழ்ப் படுத்துங்கள்' என்ற இறைவார்த்தைகளை நாம் மீறுதல் கூடாது.

மனிதன் தீமைக்குச் செவிமடுத்துத் தன் கடமைகளில் தவறியதால் தண்டனைக்குள்ளானான் என்கிறது தொடக்கநூல்.

இதனால் மனித சமுதாயம் முழுவதுமே தீமைக் குள்ளாகியது.

ஆதாமின் மகன் காயின் தன் சகோதரன் ஆபேலைக் கொலை செய்தான்.

தீமை ஒரு போதும் வெற்றிகொள்ளாது என்பதும் ஒரு சிறந்த மனிதனால் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் நோவா, மோசே, திருமுழுக்கு யோவான் ஆகியோரின் வாழ்விலிருந்து தெளிவாகிறது.

பாவஞ்செய்த மக்களை வெள்ளத்தால் அழித்த இறைவன் நோவாவையும் அவரது குடும்பத்தாரையும் காக்க அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டார்.

நோவாவுடன் செய்த உடன்படிக்கை
தொடக்கநூல் 7ம், 8ம், அதிகாரங்கள்

எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்த மக்களை மீட்க இறைவன் மோசேயைத் தேர்தெடுத்தார்.

விடுதலைப்பயணம் 3:10, 19:1, - 20:17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துநாதரின் முன்னோடியாக திருமுழுக்கு யோவான் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தம்மைப்பற்றிக் கூறிய குறிப்புகள்

1.. நான்மெசியா அல்ல.

2. அவருடைய மிதியடிகளைத்தூக்கிச் செல்லக்கூட நான் தகுதியற்றவன் லூக் 3:15,16

**இவர் கற்பித்த புதிய சமுதாயக் கோட்பாடுகள்**

1. பாவமன்னிப்படைய மனந்திரும்பி திருமுழுக்குப்பெறுதல் அவசியம்

**2. மக்கட்தலைவர்கட்கு அறிவுரை.**

மனம் மாறினீர்கள் என்பதைச் செயலில் காட்டுங்கள்.

**3. செல்வந்தர்க்கு அறிவுரை**

இரு அங்கிகளையுடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்.

**4. வரி தண்டுவோருக்கு அறிவுரை**

உங்களுக்குக் குறிப்பிட்ட தொகைக்கதிகமாக எதையும் தண்டாதீர்கள்

**5. படைவீரர்க்கறிவுரை**

நீங்களெவரையும் அச்சுறுத்திப்பணம் பறிக்காதீர்கள். யார்மீதும் பொய்க்குற்றம் சுமத்தாதீர்கள்

**கடமைகளில் தவறுவதால் ஏற்படும் தீமைகள்**

**காலத்தின் அறிகுறிகள்**

1. சர்வதேசப்பட்டினி
2. ஊட்டக்குறைபாடு.
3. நோய்வாய்ப்பட்டநிலை
4. சுற்றாடல் மாசடைதல்.
5. தொழில் வாய்ப்பின்மை.
6. வறுமை.
7. போர் அச்சம்.

**விழுமியங்களைக் கடைப்பிடிப்பது எமது கடமை யாகும்.**

**கிறிஸ்துதரும் விழுமியங்கள்**

1. பகைவரை அன்பு செய்யுங்கள்
2. உங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள்
3. உங்களைச் சபிப்பவர்களை ஆசிர்வதியுங்கள்
4. இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்
5. ஒருகன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தைத் திருப்பிக் காட்டுங்கள்
6. உடைமைகளைப் பறிப்பவர்களிடமிருந்து திருப்பிக் கேட்காதீர்கள்
7. பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

**உரிமைகளைவிட கடமைகள் மேலாவை:**

தொடக்கநூல் 2:18

சமுதாயத்தில் வாழும் மனிதனுக்குப் பல உரிமைகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை கடமைகளும் வழங்கப் பட்டுள்ளன.

**மாணவரது சிறந்த சிறப்பியல்புகளாகக் காணப்படவேண்டிய கடமைகள்:**

1. தம் வாழ்வுக்காகவும், பொதுநலனுக்காகவும் உழைத்தல்.
2. ஒவ்வொருவருடைய உரிமைகளையும் ஏற்று மதிப்பளித்தல்
3. தமது கடமைகள் எவையென அறிந்து அவற்றை நிறைவேற்றுதல்.

**கிறிஸ்தவரின் கடமை**

1. இறைதிட்டத்திற் கேற்ப கடமைகளை நிறைவேற்றுகையில் எதிர்ப்புகளின்றி முழுப்பொறுப்புணர்ச்சியுடனும் நல்ல நோக்கத்துடனும் செயற்பட்டுப் பொது மனித உரிமையைப் பெற்றுக்கொள்ள முன்நிற்பது.
2. மனித உடல் உழைப்புக்கேற்றபடி உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, உழைப்புக்கு மதிப்பளித்தல், நாட்டையும் இனத்தையும் முன்னேற்றுதல், படைப்பை விருத்தி செய்தல்.

கடமைகள் தொடர்பாகக் கிறிஸ்து முன்மாதிரிகை காட்டியுள்ளார்.

நம் நாட்டுக் கிறிஸ்தவ சமுதாயம் இறைதிட்டத்தினை விளங்கி திருச்சபையின் படிப்பினைகளையேற்று, இறைமக்களனைவருக்கும் நற்செய்தியை அறிவிக்கத் தேவையான அறிவைப் பெறுதல் அவசியம்.

கிறிஸ்தவ இளைஞர்கள் இப்போதிருந்தே தம்மிடம் ஒப்படைக்கப்படும் கடமைகளையும், உரிமைகளையுமறிந்து அனைவருக்கும் அனைத்துமாக இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18ம் பாடம்

### சவால்களினூடாக நிறைவான வாழ்வைப் பெறுவோம்

- ரொபைரோ ஆண்டகை தீமையை எதிர்த்துப் பேசியதால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- மத்தேயு 16 :24
- லூக்கா 4 :18 இலுள்ள இயேசுவின் வருகைக்கான காரணங்கள்:

1. ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்க வந்தார்
2. சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என முழக்கமிட வந்தார்
3. பார்வையற்றோர் பார்வையடைவரென முழக்கமிட வந்தார்
4. ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் வந்தார்

- இந்நோக்கங்களுக்காகக் கிறிஸ்து முழு வாழ்வையும் செலவிட்டார்
- திருமுழுக்கு யோவானின் சீடர்கள் வரவிருப்பவர் நீர்தாமோ அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமோ எனக் கேட்டதற்குக் கிறிஸ்து அளித்த பதில் இந்நோக் கத்தைக் கூறுகிறது லூக்கா 7:18 ~23
- கிறிஸ்துவின் பொதுநலத் தொண்டு யூதத் தலைவர்க்கும் வேறு சிலருக்கும் இடையூறானது. எனவே அவர்கள் கிறிஸ்துவை எதிர்த்தனர்.

1. தன் உறவினரால் புறக்கணிக்கப்படல்
   மாற்கு 31 : 20, 21
2. தன் அப்போஸ்தலர்களால் புறக்கணிக்கப்படல்
   லூக்கா : 22 : 47.57 யோவான் 6:66
3. தன் சகோதரரால் புறக்கணிக்கப்படல்
   யோவான் 4:7
4. தன் சொந்த ஊரில் புறக்கணிக்கப்படல்
   லூக்கா 04 : 16~30 மாற்கு 6: 1~6
5. மக்களால் புறக்கணிக்கப்படல்
   லூக்கா 23: 18 21
6. உலகமக்களால் புறக்கணிக்கப்படல்
   லூக்கா 23: 24. 37

### எதிர்ப்புகட்கு மத்தியில் இயேசு செயலாற்றிய விதம்

- அச்சமின்றிப் பகிரங்கமாக மக்களுக்குப் போதித் துத் தம் வாழ்நாள் முழுவதையும் இறைதந்தையின் விருப்பத்திற்கேற்ப நடத்தினார்.
- உமது விருப்பப்படியே ஆகட்டும் என்று ஏற்றுக் கொண்டார்.

மக்களுக்குச் சவாலாக அமைந்த கிறிஸ்துவின் போதனைகள்

1. லூக்கா 6: 1~5
2. லூக்கா 11:14 ~23 12:10
3. மாற்கு 3:31 ~35
4. மாற்கு 4 : 01 25
5. மத்தேயு 5: 3~10 லூக்கா 1: 20~28
6. லூக்கா 12: 4~6 22~34
7. லூக்கா 6:20~26
8. லூக்கா 7: 36~50

- லூக்கா 23ம் அதிகாரம்
  மன்னிப்பு. மோட்சமளித்தமை. ஆறுதல் கூறியமை. தன்னுயிரை நீத்தமை.
- லூக்கா 6: 12~16 கிறிஸ்து யூதப் பண்பாட்டுக்குப் பதிலாக அன்பின் பண்பாடுகளை ஏற்படுத்தினார்

## எது வாழ்க்கை?

லிபர்மென் என்பவரின் நூற்றியோராவது வயதில் பத்திரிகையாளர்கள் அவரைப் பேட்டி கண்டபோது அவர் சொன்ன பதில் இது.

இப்போதும் நூற்றி ஒன்று வயது அடைந்துவிட்ட முதியவனாக என்னை நான் கருதவில்லை. நூற்றி ஒரு ஆண்டுகளில் அனுபவம் ஏற்பட்ட மனிதனாகவே என்னை நான் எண்ணிக்கொள்ளுகிறேன். எண்பது, தொண்ணூறு வயதெல்லாம் வயோதிகமே அல்ல. வயதாகிவிட்டது என்று ஒருபோதும் எண்ணாதீர்கள். உங்களால் என்ன சாதிக்க முடியும் என்பதிலேயே கவனமாக இருங்கள். அதுதான் வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருச்சபைச் செய்திகள்

## மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபையின் ஒன்று கூடல்

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட மேய்ப்புப் பணிச்சபையின் வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும் கடந்தமாதம் (ஒக்டோபர்) 26, 27ம் நாள்களில் மன்ரேசா தியான இல்லத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை ஆகிய மறைக்கோட்டங்களிலிருந்து குருக்கள், துறவியர், பொது நிலையினர் உட்பட அங்கத்தவர்கள் பங்கு கொண்ட இவ்வொன்றுகூடலின் முதல்நாள் நிகழ்வில் "பங்குத் தளங்களைக் கட்டி எழுப்புவதில் இறைமக்களின் பங்களிப்பு" என்னும் பொருளில் அருட்பணி ச.மு. பெலிக்ஸ் அவர்களும், "அன்பியத்தின் அவசியம்" என்னும் பொருளில் திரு. J. பத்திநாதன் அவர்களும் உரை ஆற்றினர். இவ்வுரைகள் தொடர்பான பொதுக் கலந்துரையாடலும் இடம் பெற்றது. மறுநாள் இடம்பெற்ற நிகழ்வுகளில் திரு/மட், மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் தலைமையில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான செயற்திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. பொது நிலையினரை உருவாக்கும் செயல்திட்டங்கள் தேவை என்றும், அதற்கு பங்குத் தந்தையர்கள் மற்றும் பொது நிலையினரின் ஒத்துழைப்புத் தேவை என்பதும் வலியுறுத்தப்பட்டது. ஆண்டுக்கொருமுறை நடைபெறும் இத்தகைய ஒன்று கூடல்கள் பொது நிலையினருக்கு புதிய விடயங்களையும், புத்துணர்ச்சியையும் தருவதாக அமைய வேண்டும் என்றும் கருத்துக்கள் கூறப்பட்டன.

## அசர்பைஜானுக்கு திருத்தந்தையின் திருப்பயணம்

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அசர்பைஜான் குடியரசிற்கு அடுத்த ஆண்டில் திருப்பயணம் மேற்கொள்ளும் வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக ரஷ்யாவின் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த செப்டம்பரின்போது அசர்பைஜான் அரசுத் தலைவர் செய்தர் அலை திருத்தந்தைக்கு விடுத்த அழைப்பிற்கு தற்போது திருத்தந்தை பதில் மொழி வழங்கியுள்ளதாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற திருத்தந்தையின் கஜகிஸ்தான் மற்றும் அர்மீனியாவுக்கான திருப்பயணத்தின்போது அசர்பைஜான் நாடும் சேர்த்துக்கொள்ளப்படும் என்ற எதிர்பார்ப்பு முன்னர் இருந்தது குறிப்பிடத்தக்கது.



## உலக அமைதிக்காக செபியுங்கள்

செபமாலை மாதா திருவிழாவைச் சிறப்பித்து கடந்த மாதம் முழுவதும் செபமாலைக்கென அர்ப்பணிக்கப் பட்டுள்ளதை உணர்ந்துள்ள கத்தோலிக்கரிடம் அமைதிக்காக செபமாலையை செபிக்குமாறு விடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை மீண்டும் புதுப்பிக்கின்றேன் என்றார் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர். கடந்த மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மூவேளை செபத்தை விசுவாசிகளுடன் இணைந்து செபிக்குமுன் உரை வழங்கிய திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அமைதியாயிருக்கும் இயேசுக்கிறீஸ்துவின் மீது நம் பார்வையைச் செலுத்தி தனிஆளாகவோ குழுவாகவோ உலக அமைதிக்காக செபமாலையை செபிப்போம் எனவிண்ணப்பித்தார். கடந்த மாதம் ரோம் நகரில் முத்திப்பேறு பட்டம் பெற்ற லூயிஜி, மற்றும் மரிய பெல்கிராபே கோத்ரோகி தம்பதியர் தமது வாழ்வில் செபமாலை செபித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டினார், திருத்தந்தை. தற்போது நடைபெற்றுவரும் ஆயர் பேரவைக் கூட்டத்துக்காக செபிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

**திருப்பீடத்தில் உயர்பதவி பெறும் முதலாவது இலங்கையர்; ஆயர் மல்கம் ரஞ்சித் அவர்கள்**

இரத்தினபுரி மறைமாவட்டத்தின் ஆயராக தற்போது பணிபுரியும் ஆயர் பேருள் திரு மல்கம்ரஞ்சித் அவர்கள் திருத்தந்தையின் வேதபோதக சபையின் சர்வதேசத்தலைவராகவும், அனைத்துலக விசுவாசப் பரப்புதல் சபையின் செயலாளராகவும் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பரினால் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் பேராயராகவும் உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983ம் ஆண்டு பாப்பரசரின் வேதபோதகச் சபையின் தேசிய இயக்குனராக நியமிக்கப்பட்ட இவர் சிறப்பான விதத்தில் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. 1991ம் ஆண்டு கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமனம் பெற்ற இவர் 1996ம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட இரத்தினபுரி மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டார்.

இலங்கையின் தேசியப் பிரச்சினைகளில் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபட்டு, ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இன மக்களுக்காகவும், நீதியான சமாதானத்திற்காகவும் இடைவிடாது குரல்கொடுத்து வந்தவர். அதற்காக பல்வேறு பயணங்களையும் மேற்கொண்டவர்.

இலங்கை ஆயர்பேரவையில் வயதில் இளையவரான ஆயர் மல்கம்ரஞ்சித் அவர்கள் இத்தகைய உயர் பதவிக்கு தேர்ந்து கொள்ளப்பட்ட முதலாவது இலங்கையர் என்பது பெருமைதருவதாகும்.

**துறவுச்சபையின் அமைதிப் பயணம்**

ஆப்கான் நாட்டிற்கு அமைதிப் பயணம் ஒன்றை மேற்கொள்ள பிரான்சிஸ்கன் துறவுச் சபையினர் திட்டமொன்றை வெளியிட்டுள்ளனர். அமைதிக்காக உழைப்பதே பிரான்சிஸ்கன் துறவுச் சபையின் தனிவரம் என்று உரைத்த பிரான்சிஸ் துறவுச் சபையின் அதிபர் குரு ஜாக்கு மோபீனி, ஒப்புரவு, மற்றும் ஐக்கியத்தின் துணைகொண்டு பகைமையையும் பழிவாங்கலையும் அமைதிமூலம் வெற்றி காணலாம் என்றார். ஆப்கானிஸ்தானுக்கு அமைதிப் பயணம் மேற்கொள்வதற்கான நாளுக்காய் பல்வேறு நாடுகளில் அங்கத்தவர்களைக் கொண்ட பிரான்சிஸ்கன் துறவுக் குழு காத்திருப்பதாகக் கூறினார் அவர்.

**அமைதிக்காக வழிபாடு**

உலகஅமைதிக்காக தாய்லாந்தில் பல்வேறுபட்ட சமயங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இணைந்து செபவழிபாடு ஒன்றை மேற்கொண்டனர். தாய்லாந்தில் றுதோன்கானி மறைமாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்கர், புரொட்டஸ்டான்ட், புத்த, மற்றும் இஸ்லாம் இளைஞர்கள் கலந்து கொண்ட இவ் உலக அமைதி செப வழிபாட்டில் இம் மூன்று முக்கிய மத புனித நூல்களிலிருந்து பகுதிகள் வாசிக்கப்பட்டு இளைஞர்களால் வழிநடத்திச் செல்லப்பட்டது.

**கோயிலுக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு**

அமெரிக்க ஐக்கிய நாட்டில் செப்டம்பர் மாதம் இடம்பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து பிரிட்டனில் கோயிலுக்குச் செல்லும் விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக டெய்லிடெலிகிராப் என்ற பத்திரிகை தெரிவிக் கிறது. கோவிலுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக ஒவ்வொரு கிறீஸ்தவ சபையும் அறிவித்துள்ள போதிலும், கத்தோலிக்க கோவில்களில் இது 20 வீதம் அதிகரித்துள்ளது. இங்கிலாந்தில் யூதக்கோவில்களுக்கு வரும் யூதர்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது. ஆனால் மசூதிகளுக்கு வரும் இஸ்லாமிய விசுவாசிகளின் எண்ணிக்கையில் மாற்றம் இல்லை எனவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

**இன்பம் மனிதன் முன் தோன்றும் போது, தனது தலையின் மீது துன்ப முடியைச் சூடி வருகின்றது. அதை வரவேற்போன் துன்பத்தையும் வரவேற்றல் அவசியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி



திரு. S.S. அந்தோனிப்பிள்ளை
மண்ணில் : 14.09.1919
விண்ணில் : 25.01.1986





திருமதி. I. அந்தோனிப்பிள்ளை
மண்ணில் : 08.04.1920
விண்ணில் : 15.08.1996

கடவுள் உங்கள் குற்றங்களை எல்லாம் மன்னிக்கிறார்.
அவர் உங்களுக்குப் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகின்றார்.
திருப்பாடல்கள் 103/3,4

நித்திய வாழ்வில் இளைப்பாற
நெஞ்சுருகி வேண்டுகிறோம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.

# கர்த்தரின் சிருஷ்டிப்பு

R. அஞ்சலீனா

(பாலர் பாடல்)

வெளிச்சமாக்கி இரவு பகலை
வெகுவாய் முதல் நாளேற்படுத்தி
ஆகாய விரிவை உண்டாக்கி
அமைத்தார் இரண்டாம் நாளினிலே

மூன்றாம் நாளில் ஜலம்பிரிய
முளைத்தது தரையின் புல் பூண்டு
செடி கொடி விருட்சம் கனிகளுடன்
சிறப்பாய் இருக்கச் செய்தனரே

நாலாம் நாளில் வானமதில்
நவமாய் உதிக்கும் சூரியனும்
சந்திரன், கோடி நட்சத்திரம்
சர்வ வல்லவருண்டாக்கினார்

ஐந்தாம் நாளில் பூமியிலே
அனந்த சாதி மச்சங்களும்
ஆகாயப் பறவையை உண்டாக்கி
அமைத்தார் ஐந்தாம் நாளினிலே

ஆறாம் நாளில் பூமியிலே
அனந்த சாதி மிருகங்களும்
அள்ளிய மண்ணால் ஆதாமை
அமைத்து ஊதி உயிர் கொடுத்தார்


ஏழாம் நாளில் பூமியிலே
எல்லாம் முடிந்து தீர்ந்ததென்று
ஓய்வாயிருந்து அந்நாளை
உயர்வாய் ஆசீர்வதித்தனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாடல்கள் இசை நாடாத் தொகுதி

## ஓர் அறிமுகம்



இலங்கையில் கிறீஸ்தவப் பாடல்களை - அதாவது தமிழ்ப் பாடல்களை ஒலி நாடாக்களாக வெளியிடுவதிலே முன்னணி வகிப்பவர் திரு. அம்புறோஸ் பீற்றர் அவர்கள். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பிரதேசங்களில் அவ்வப்போது கிறீஸ்தவப் பாடல்கள் ஒலிநாடாக்களாக வெளியிடப்பட்டாலும் இலங்கையில் தொடர்ந்து அதிக அளவில் தமிழ்க் கிறீஸ்தவப் பாடல்களை ஒலி நாடாக்களாக வெளியிட்டு வருபவர் திரு.அம்புறோஸ் பீற்றர் அவர்களே என்றால் அது மிகையன்று





கடந்த காலங்களில் இயேசு கானங்கள், அற்புதகானங்கள் என்றும் இன்னும் வேறுசில ஒலிநாடாக்களையும் வெளியிட்டுள்ள அவர் அண்மையில் வெளியிட்ட திருவிசைத் தொகுப்பு 'திருப் பாடல்கள்' ஆகும். கொழும்பு மறைமாவட்டப் பேராயர் பேரருள் திரு நிக்லஸ் மார்க்கஸ் பெர்னான்டோ அவர்களின் ஆயர் பணியின் வெள்ளி விழா நினைவாக வெளியிடப்பட்ட இப் பாடல்களின் குறிப்பிடத்தக்க சிறப்பு என்னவென்றால் அத்தனையும் திருவிவிலியத்திலே காணப்படுகின்ற திருப்பாடல்களின் (சங்கீதங்களின்) இசை வடிவமாக இருப்பதுதான்.

திருவிவிலியத்தில் 19வது நூலாக வைக்கப்பட்டுள்ள திருப்பாடல்கள், பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு கவிஞர்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். இப்பக்திப் பாடல்கள் பல்வேறு சூழ்நிலைகளில் பாடப்பட்டுள்ளன. இவைகளை இஸ்ராயேல் மக்கள் தம் வழிபாடுகள், திருயாத்திரைகள் போன்றவற்றில் பாடி வந்துள்ளனர். காலப்போக்கில் இவை திருமறை நூலில் ஒரு தொகுப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கிறீஸ்துவின் வாழ்விலும், பணியிலும் திருப்பாடல்கள் சிறப்பிடம் பெற்றதை நற்செய்தியிலே நாம் கண்டு கொள்ளலாம். திருச்சபையின் திருவழிபாட்டிலும் திருப்பாடல்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. உலகெங்கும் உள்ள குருக்களும் துறவிகளும் திருப்பாடல்களை தமது நாளாந்த செபங்களில் சொல்லி வருகின்றனர். இத்தகைய சிறப்பு மிக்க 150 திருப்பாடல்கள் திருவிவிலியத்தில் தொகுப்பாக உள்ளன. அவற்றைத் தழுவியும் சுருக்கியும் எளிய தமிழ்க் கவிதைகளாக்கி அதனை ஒரு நூலாக சில ஆண்டுகளுக்கு முன் திரு. அம்புறோஸ் பீற்றர் வெளியிட்டிருந்தார். அவ்வாறு கவிதைகளாக வெளிவந்த திருப்பாடல்களிலிருந்து முப்பது கவிதைகளை இசையோடு பாடும் வண்ணம் இசைப்பாடல்களாகத் தற்போது வெளியிட்டுள்ளார்.

தற்காலக் கிறீஸ்தவப் பாடல்களில் ஒரு சினிமாத்தனம் தெரிவதாக பரவலான குற்றச்சாட்டு உண்டு. அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. இன்று தமிழ் நாட்டுத் திரைஉலகிலே புகழ்பெற்ற இசையமைப்பாளர்களாக விளங்கும் சிலர் ஆரம்ப காலங்களில் கிறீஸ்தவப் பாடல்களுக்கு இசையமைத்துக் கொண்டிருந்தவர்கள்தான். ஒரு வகையில் அவர்கள் தம்மை வளர்த்துக் கொள்வதற்கு கிறீஸ்தவப் பாடல் தயாரிப்புகளே காரணமாக அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவையும் கிறீஸ்தவப் பாடல்கள் சினிமாப் பாடல்களின் சாயலைப் பெறுவதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் அம்புறோஸ் பீற்றர் அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள திருப்பாடல்கள் இந்நடைமுறைக்கு மாறாக ஆலயங்களிலும்




வேறு பிரார்த்தனை வேளைகளிலும், தியானங்களிலும் பாடுவதற்கேற்ப அமைதியும் எளிமையும் பக்தியும் நிரம்பிய இசைப்பாடலாக இருப்பதை கேட்கும் போது உணர முடிகின்றது.

திருப்பாடல்களுக்கு இசையமைத்திருப்பவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த B.M. லாரன்ஸ் என்னும் இளைஞர். பாடியிருப்பவர்கள் தமிழ்நாட்டில் கிறிஸ்தவப் பாடல் உலகில் பிரபலம் பெற்றுள்ள பிரபாகர், ஹேமாஜான், அனந்து, பிரியா, லீமா, சசிரேகா, தாமஸ், தினேஸ், ஷோபியா, கனகராஜ் ஆகியோர். தமிழ் நாட்டு ஆயர்களின் கூட்டுப் பொறுப்பில் இயங்கிவரும், புகழ்பெற்ற சாந்தோம் கலைத் தொடர்பு நிலையத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கைத் தயாரிப்பாயினும், தமிழகத்திலே உருவாகியிருப்பதால் தமிழக மணத்தோடுதான் பின்னணி இசையும் பாடும் குரல்களும் இனிக்கின்றன.

திருவிவிலியம் கிறீஸ்தவ மக்களுக்கு புனித நூல். அதில் காணப்படும் ஒவ்வொரு எழுத்தும், ஒவ்வொரு புள்ளியும் இறை ஏவுதலால் எழுதப்பட்டது என்பதே கிறீஸ்தவ மக்களின் உறுதியான நம்பிக்கை. அத்தகைய புனித நூலிலிருந்து ஒரு பகுதி பாடல்களாக வடிவும் பெற்று இசைவாகனமேறி நம் கைக்கு வந்திருப்பது நமக்கெல்லாம், மகிழ்ச்சியும், பரவசமும் தருகின்ற நிகழ்வாகும். ‘அருட்தந்தையர்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் தம் ஆலயங்களிலும், ஆன்ம நலப்பணியகங்களிலும் இதனைப் பயன்படுத்தலாம்’ - என கொழும்பு மறைமாவட்ட ஆயர் பரிந்துரைப்பதிலிருந்து இத்திருப்பாடல்கள் ஒலி நாடாக்களின் சிறப்பும் முக்கியத்துவமும் புலனாகின்றன.

இத்தகைய அருமையான பாடல்களைக் கொண்ட திருப்பாடல்கள் அடங்கிய மூன்று பாகங்கள் வெளிவந்துள்ளன. மேலும் பல தொடர்கள் - ஏறத்தாள பதினைந்து பாகங்கள் வெளி வரவிருப்பதாக அறிகிறோம். இது மிகுந்த செலவுள்ள ஒரு பாரிய முயற்சி என்பதை இத்துறையில் ஈடுபட்டவர்கள் அறிவார்கள். ஆயினும் இத்திருப்பணியில் அர்ப்பண உணர்வோடு தம்மை ஈடுபடுத்தி, திருச்சபை வளர, இறையாட்சி ஓங்க உழைக்கின்ற இதன் தயாரிப்பாளரை பாராட்டி உற்சாகப்படுத்துவது கிறீஸ்தவ மக்களின் கடமையாகும்.

- மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிசுப்போட்டி !**

**விவிலியம் கற்போம் -13**

பிள்ளைகளுக்கு மட்டும்!

முடிவுத்திகதி 20. 12. 2001

## தானியம் வாங்க வந்த சகோதரர்கள்

(தொடக்க நூல் 42: 1~ 24)

## - இடைவெளி நிரப்புதல் -

எகிப்து நாட்டில் .......................... கிடைப்பதை அறிந்த யாக்கோப்பு தனது மக்கள் பத்துப்பேரை அங்கு அனுப்பிவைத்தார். இளையவனான .......................... அனுப்பவில்லை. எகிப்துக்குச் சென்ற சகோதரர்கள் அங்கே ஆளுனராய் இருந்து, தானியம் விற்கும் அதிகாரம் பெற்றிருந்த யோசப்பை .......................... தாழ்ந்து வணங்கினார்கள். அவரை அவர்கள் அடையாளம் காணவில்லை; ஆனால், யோசேப்பு தமது சகோதரர்களை அறிந்துகொண்டார். எனினும், ஒன்று மறியாதவர்போல, 'நீங்கள் .......................... எமது நாட்டை உளவு பார்க்க வந்திருக்கிறீர்கள்' என்று கடுமையாகப் பேசினார். பயந்துவிட்ட பத்துப்பேரும், 'இல்லை தலைவரே! நாங்கள் .......................... பொருட்கள் வாங்கவே வந்துள்ளோம். நாங்கள் .......................... நாட்டில் வாழும் ஒரே தந்தையின் பன்னிரு புதல்வர்கள், இளையவன் தந்தையோடு இருக்கிறான், இன்னொருவன் இறந்துவிட்டான் என்றார்கள். அதைக்கேட்ட யோசேப்பு, 'உங்கள் இளைய .......................... இங்கே வந்தாலொழிய, நீங்கள் இங்கிருந்து புறப்பட முடியாது. எனவே உங்கள் சகோதரனை அழைத்துவரும்படி உங்களில் ஒருவனை அனுப்புங்கள், மற்றவர்கள் .......................... அடைக்கப்படுவீர்கள்' என்று அவர்களைக் காவலில் வைத்தார். எனினும் .......................... நாள் அவர்களை நோக்கி 'நான் கடவுளுக்கு அஞ்சுபவன், நான் சொல்கிறபடி செய்யுங்கள். உங்களில் ஒருவர் சிறையில் அடைபட்டிருக்கட்டும் மற்றவர்கள் புறப்பட்டு, பஞ்சத்தால் வாடும் உங்கள் குடும்பத்தாருக்கு தானியம் கொண்டு போகலாம். உங்கள் இளைய சகோதரனை அழைத்து வாருங்கள் அப்பொழுது உங்களை நம்பலாம்' என்று .......................... பிடித்து அவர்கள் முன்பாக விலங்கிட்டார்.

இடைவெளியில் :-

| | | |
|---|---|---|
| *1) தானியம்* | *2) பென்யமினை* | *3) தரைமட்டும்* |
| *4) ஒற்றர்கள்* | *5) உணவு* | *6) கானான்* |
| *7) சகோதரன்* | *8) சிறையில்* | *9) மூன்றாம்* |
| *10) சிமியோனை.* | | |

*குறிப்பு :–* வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும். வேறுவகையில் எழுதி அனுப்பப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. போட்டி முடிவுகள் தொண்டன் இதழில் வெளியிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி!

பிள்ளைகளுக்கு மட்டும் !
முடிவுத்திகதி :- 20. 12. 2001

## அறிவைவளர்ப்போம் - 13

(சரியான விடையைத் தெரிவுசெய்து அடிக்கோடிடுக.)

1. வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் ....... என்னும் வெண்பாவைப் பாடியவர்

(புகழேந்திப்புலவர், பாரதியார், ஔவையார்)

2. ஒலிம்பிக் போட்டிகளில் முதன்முதலாக பதக்கம் வென்ற இலங்கை வீரர்

(சுசந்திகா, டங்கன்வைட், சனத்ஜெயசூரியா)

3. மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் இரும்புச்சத்து அதிகமுள்ள பழம்

(திராட்சை, அப்பிள், பேரீச்சை)

4. சூரிய குடும்பத்தில் உள்ள கிரகங்களில் மிகவும் பெரியது

(வெள்ளி, வியாழன், செவ்வாய்)

5. உலகிலேயே அதிகம் இஸ்லாமியர்கள் வாழும் நாடு

(மலேஷியா, இந்தோனேஷியா, சவூதி அரேபியா)

6. ஒக்டோபர் தொண்டனில் இடம் பெற்ற 'முத்தாய்ப்பு' என்னும் கவிதையை எழுதியவர்

(வாகரைவாணன், F. சந்திரிக்கா, வால்ட்விட்மன்)

பெயர்:- ..............................................................................................

முகவரி ..............................................................................................

அனுப்ப வேண்டிய முகவரி
விவிலியம் கற்போம் - 13 அறிவை வளர்ப்போம் - 13
தொண்டன்
அ.பெ.எண். 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியம் கற்போம் – 11



### விடைகள்

1) நைல் நதிக்கரையில் 2) ஏழு 3) கோரைப் புற்கள்

4) கீழைக் காற்றினால் 5) மது பரிமாறுவோரின் தலைவன்

**50/- பரிசு பெறுவோர்**

1) *டிலைக்சன் டிலிமா*
மாயழகு வீதி
அக்கரைப்பற்று - 8

2) *சா. மேரி குயின்ஸ்லி மொறாயஸ்*
அரிப்பு
முருங்கன்

3) *சுகேசன் ஜெறோம்*
26/2 நல்லையா வீதி
மட்டக்களப்பு

4) *சபாரத்தினம் லெனாட் சுதன்*
மாங்காடு
செட்டிபாளையம்

5) *வி. வேஜினி வினித்தா*
30, சிறில் ஒழுங்கை
தாண்டவன் வெளி
மட்டக்களப்பு

---

## அறிவை வளர்ப்போம் – 11



### விடைகள்

1) இளங்கோவடிகள், 2) முத்தையா முரளிதரன் 3) கிறிஸ்டியன் பேனார்ட்
4) இந்தியா. இலங்கை. பங்காளதேஷ். பாக்கிஸ்தான், மாலைதீவு, பூட்டான்,நேபாளம்
5) சீனா. 6) ‘அம்மா! அதில் என் பெயர் இருக்கிறதா?

**50/- பரிசு பெறுவோர்**

1) *அ. கலிஸ்ரா சுபாஷினி*
இனிக்கோ, புதுமுகத்துவார வீதி
கல்லடி, மட்டக்களப்பு.

2) *வ. டிலக்சினி*
42/29 5ம் குறுக்கு
இருதயபுரம்
மட்டக்களப்பு

3) A. *குயினா கூஞ்ஞு*
திருக்குடும்ப கன்னியர் இல்லம்
நாகொடை
கந்தானை

4) *வெரோனிக்கா மத்தியூஸ்*
43. இராஜவரோதயம் வீதி
திருகோணமலை

5) *ஷாலினி சிறில் பத்மநாதன்*
57/2 மத்திய வீதி
உவர்மலை
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Registered as a News Paper in Sri Lanka.*

# காற்றில் கலந்து வரும்

## இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள் நவம்பர் - டிசம்பர் 2001

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் : காலை 5.50 மணி**

நவம்பர் : 17, 18, 19, 20, 21, 22, 23

டிசம்பர் : 01, 02, 03, 04, 05, 06, 07, 15, 16, 17, 18, 19, 20, 21

**சிறுவர் உலகம் : மாலை 7.45 மணி**

நவம்பர் : 27

டிசம்பர் : 11 - திருமறை வினாவிடை போட்டி நிகழ்ச்சி

**புதிய உலகம் : மாலை 7.00 மணி**

நவம்பர் : 25, "திருப்பாடல்கள்" ஒலி நாடா அறிமுகம்

டிசம்பர் : 09 பல்சுவை நிகழ்ச்சி



**நிகழ்ச்சித் தொகுப்பு : மலர்வேந்தன்**

தொடர்பு : சமூகத்தொடர்பு நிலையம்,
அ.பெ.எண் - 44,
மட்டக்களப்பு.


---

## கிறிஸ்மஸ் ஒலிநாடாக்கள்

1. வழிகாட்டும் விண் மீன் (புகழ்பெற்ற ஆங்கிலப் பாடல்கள் தமிழில்)
2. வானத்திலே புது நட்சத்திரம்
3. கிறிஸ்மஸ் - புத்தாண்டு திருப்பலிப் பாடல்கள் (வழிபாட்டிற்காக வாத்திய இசையுடன்)

## புதிய கிறிஸ்தவப் பாடல்கள்

1. உன் பாசக்கரத்தில்
2. திருப்பாடல்கள் – பாகம் 1, 2, 3
3. நிறை வாழ்வை நோக்கி
4. உறவலைகள்



தொடர்புகளுக்கு :
சமூகத்தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

நாடா ஒன்றின் விலை: 100/=
தபாற் செலவு : 20/=

St. Ignatius *Type Setting* - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Designation - St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org